# கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர
# நினைவுப் பேருரை - 32

## தேசத்தின் விடியலுக்காய் இலங்கையில் வேண்டப்படும் கல்விச் சீர்திருத்தம்

**பேராசிரியர் அதுல சுமதிபால**

13 அக்டோபர் 2022

ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**

கலாநிதி சி.டபிள்யு. டபிள்யு. கன்னங்கர
நினைவுப் பேருரை - 32

தேசத்தின் விடியலுக்காய் இலங்கையில் வேண்டப்படும் கல்விச் சீர்திருத்தம்

பேராசிரியர் அதுல சுமதிபால

முதலாம் பதிப்பு - 2022

© தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடல் : அச்சிடல், வெளியீடுகள் துறை
தேசிய கல்வி நிறுவகம்,
மஹறகம
இலங்கை
**www.nie.lk**
தொலைபேசி 0117 601 601

## தேசத்தின் விடியலுக்காய் இலங்கையில் வேண்டப்படும் கல்விச்சீர்திருத்தம்

கலாநிதி சீ.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களை நினைவுகூரும் முகமாக அவர் மறைந்து 20வருடங்களின் பின்னர், அதாவது 1988 இல் ஆரம்பிக்கப்பட்ட சொற்பொழிவுத் தொடரில் முப்பத்திரண்டாவதை நிகழ்த்துவதற்கு எனக்கு கிடைத்துள்ள அழைப்பையும் வாய்ப்பையும், இலவசக் கல்வியினால் உருவாக்கப்பட்ட பற்றும் ஆற்றலும் மிக்க ஓர் இலங்கையன் என்ற வகையில் எனக்குக் கிடைத்த பாக்கியமாகவும் கௌரவமாகவும் ஒரு வரப்பிரசாதமாகவும் கருதுகின்றேன். இலவசக் கல்வியின் மூலம் உருவாக்கப்பட்ட கல்வியியலாளர்களும் தொழில்வாண்மை உள்ளவர்களும் இதற்கு முன்னரும் சொற்பொழிவுகளின் ஊடாக முன்வைத்த கருத்துக்களை நோக்கும் போது என் மீது பாரிய பொறுப்பொன்று சுமத்தப்பட்டுள்ளது என்பதை நன்கு உணர்கின்றேன். இப்போது இன்றைய பொருளாதார, அரசியல், சமூக பிரச்சினைகளும் இந்தச் சொற்பொழிவை ஆற்றும் பின்னணியைச் சிக்கலாக்கியிருக்கின்றன. இந்தப் பின்னணியில், மிகப் பணிவான முறையில், எனது தோள்களில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்பினை விளங்கிக் கொண்டு, எனது சொற்பொழிவை முடிந்த அளவு நியாயப்படுத்துவதற்காக இயலுமான முயற்சியை மேற்கொள்வேன் என முதலில் கூறிவைக்க விரும்புகிறேன்.

தொழில் ரீதியில் மருத்துவ அறிவை விருத்தி செய்து கொண்ட போதிலும், அடுத்தவர்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்வதிலேயே எனது வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்திருக்கிறேன். எனவே எனது வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது ஓர் ஆசிரியராக இருப்பதுடன், அதனூடாக மீண்டும் மீண்டும் மாணவனாக மாறிய வரலாறே. பதினைந்தாவது வயதில் எனது மூத்த சகோதரிக்கு எண் கணிதத்தைச் சொல்லிக் கொடுக்கும் பாரதூரமான செயலில் ஈடுபட்டபோதே நான் முதன் முதலாக ஆசிரியராக மாறினேன். அதன் பிறகு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னரும், மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறக் காத்திருந்த

காலத்திலும், மருத்துவக் கல்லூரியில் இருந்த ஐந்து வருட காலத்திலும், அதன் பின்னரும்கூட ஆசிரியராக இருந்திருக்கிறேன். 'வித்யா நதீ' என்ற பெயரில் தனியார் கல்விக் கூடம் ஒன்றை நான் நடத்திச் சென்றது பொருளாதாரக் காரணங்களுக்காக அல்ல. இலவசமாக நான் வழங்கிய கல்வியினால் பயனடைந்த மாணவர்களின் வார்த்தைகள் காரணமாக எனக்கு அப்பொறுப்பிலிருந்து தப்பிக் கொள்ள முடியாமற் போய்விட்டது. அதனூடாக நான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மிக அதிகம். அந்த மாணவ மாணவிகள் இன்று சமூகத்தில் உயர்நிலையில் இருக்கின்றார்கள். அது முதல் உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் தொழிற்பாட்டிலும் ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதிலேயே எனது வாழ்க்கையின் பெரும் பகுதி கழிந்திருக்கிறது. இந்தப் பின்னணியில் நான் ஒரு வைத்தியர் என்பதை விட ஓர் ஆசிரியனாகவும், ஆசிரிய ஆய்வாளராகவும் செயல்பட்டிருக்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். அத்தோடு, சமூக உணர்வு கொண்ட ஒரு மருத்துவ மாணவன் என்ற வகையில், தாய் நாடு வேண்டி நின்ற காலப்பகுதியில் இலவசக் கல்விக்காகப் போராடிய மாணவ செயற்பாட்டாளனாக இருந்ததோடு, சமூக உணர்வு கொண்ட மனிதன் என்ற வகையில் கல்வியை வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்குபவானாகவும் இருந்தேன். இன்று நிலவும் குழப்பமான சமூக நிலை காரணமாக, அந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் மீளச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலைக்கு ஆளாகி இருக்கிறேன்.

இவ்வாறான சிக்கல் நிறைந்த பின்னணியில், நான் இன்று ஆற்றப் போகும் சொற்பொழிவின் அடிப்படையாக அமையப்போவது, எனது அன்புக்குரிய ஆசிரியராக நான் கண்ணியப்படுத்துகின்ற பேராசிரியர் நாரத வர்ணசூரிய அவர்கள் 2008 இல் சீ.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர ஞாபகார்த்த உரையை நிகழ்த்தும்போது தெளிவு படுத்திய இரு நிலைப்பாடுகளும் ஆகும். அதில் ஒரு நிலைப்பாடாக அவர், 'கன்னங்கர மரபினால் ஒரு பரிமாணமாகக் கருதப்படுகின்ற நியாயத்தையும் சமூக நீதியையும் கட்டிக்காக்கின்ற அதே வேளையில் கல்வியை மேலும் விரிவடையச் செய்வதற்கான


பெறுமதி மிக்க அடிப்படையாக' அது திகழ்கிறது என்பதைக் குறிப்பிட்டிருந்தார். அவர் அதனை 'நியாயமான, முரண்பாடுகளற்ற, உறுதியான சமூகம் ஒன்றின் அடித்தளம்' என்ற வகையில் நோக்கினார்.

கடந்த காலத்தில் கன்னங்கர சீர்திருத்தங்கள் 'சாதகமான சமூகம் ஒன்றையும், சமூக மாற்றம் ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது என்பதை ஏற்றுக் கொண்ட போதிலும், கோளமயமான, திறந்த சந்தைப் பொருளாதாரமொன்றைக் கொண்டுள்ள இன்றைய சூழலில் அவை பொருத்தமற்றவை' என மற்றொரு கூட்டத்தினர் கருதுகின்றனர். "அறிவினால் வலுப்பெற்ற வெற்றிகரமான பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு எதிரான, புனிதப் பசு போன்ற, முன்னேற்றத்தைத் தடுக்கும் புராதனத் தடை ஒன்றாகவே அவர்கள் அதனைக் காண்கின்றனர்.

விமர்சனக் கண்ணோட்டத்தில் கல்வியைத் திருப்பி நோக்கும் நான், மேற்சொன்ன எந்தக் கூட்டத்தையும் சேர்ந்தவன் அல்லன். எனினும் நான் இவ்விரு கூட்டங்களினதும் நேர்வகையான மற்றும் எதிர்மறையான அணுகுமுறைகள் தொடர்பாக நடுநிலையிலிருந்து இச்சொற்பொழிவை ஆற்றுவதற்குத் தீர்மானித்தேன். அதனால்தான் நான் எனது தலைப்பாக 'தேசத்தின் விடியலுக்காய் இலங்கையில் வேண்டப்படும் கல்விச்சீர்திருத்தம்' என்பதைத் தேர்ந்தெடுத்தேன். இங்கு அதனை மேலும் விரிவாக்கி 'சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர அவர்களின் மரபுரிமையின் அடுத்த கட்டம் எதுவாக இருக்க வேண்டும்?' என்ற வினாவை எழுப்புவதற்கு ஏற்ற அடித்தளமாக இச்சொற்பொழிவை அமைத்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கு இதனை 'எனது சொற்பொழிவு' என்று கூறுவதை விட 'எமது சொற்பொழிவு' எனக் குறிப்பிடுவதற்கு நான் முனைகிறேன். ஏனெனில், குழு மனப்பாங்கோடு செயற்படுகின்ற என்னுடன் சேர்ந்து கல்விச் சீர்திருத்தத்துக்காக பங்களிப்புச் செய்கின்ற பெரியதொரு கூட்டத்தினரின் கருத்துக்கள் எனது உரையில் அடங்கி இருக்கின்றன.

இந்த உரைக்கு அடிப்படையாக உள்ள பல விடயங்கள், அண்மையில் எம்மால் வெளியிடப்பட்ட 'கவேஷன' என்ற சஞ்சிகையின் முப்பத்து

ஒன்பதாவது இதழுக்கு அடிப்படையாக அமைந்த 'நவீன உலகுக்குப் பொருத்தமான ஒரு பிரசையை உருவாக்குவதற்காக நாடு வேண்டி நிற்கும் கல்விச் சீர்திருத்தங்கள்' என்ற நூறு பக்கங்கள் கொண்ட விசேட மலரில் அடங்கியுள்ள கருத்துக்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. ஆய்வுக் கல்வி இதழொன்றாக வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகை, தரவு அடிப்படையிலான பரிமாணத்தைக் கொண்டதாக இருக்கிறது. இந்த 'கவேஷன' சஞ்சிகையின் இன்னொரு சிறப்பு என்னவெனில், தற்போதைய கல்வித் திணைக்களத்தின் சீர்திருத்தங்களில் பங்கேற்றுச் செயற்படுகின்றவர்களும், அவை தொடர்பாக நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் அறிஞர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் முதலியவர்களோடு அதற்கு அப்பால் உள்ள சமூகத்தின் பல கூறுகளைச் சேர்ந்தவர்களும் இதற்குப் பங்களிப்பு செய்துள்ளனர்.




'ஆழ் கடலுடனான போராட்டத்தில் மனிதன் தனியாக வெற்றி பெறுவதில்லை' என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளவன் என்ற வகையில், நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்கு சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர ஒருவர் மாத்திரம் போதாது; கன்னங்கர போன்ற ஆயிரக்கணக்கானோர் தேவைப்படும் காலமொன்று வரவேண்டும் எனத் தெளிவாக கூற விரும்புகிறேன். அத்தோடு மேலிருந்து கீழ் நோக்கிச் சுமத்தப்படும் கல்விச் சீர்திருத்தங்களுக்குப் பதிலாக, அவற்றின் விளைவுகளில் பங்கெடுக்கப்

போகும் அறிவுபூர்வமான மாணவ சமுதாயத்தையும் பொது மக்களையும் பங்கேற்கச் செய்து, தரைமட்ட ஆய்வுகள், தொடரான மீள் ஊட்டல்கள், மறுபரிசீலனை என்பவற்றோடு இணைந்த கல்விச் சீர்திருத்தங்கள் சமூகத்திற்கு வழங்கப்பட வேண்டும். அதே வேளை காலத்திற்கு காலம் செய்யப்படும் விஞ்ஞான ரீதியான மீளாய்வின் ஊடாக, கல்விச் சீர்திருத்தங்களின் திசை, உள்ளடக்கம் என்பவற்றை மாற்றிக் கொண்டு, தேக்கமுறாத, இயங்கு நிலை கொண்ட கல்விச் சீர்திருத்தங்களை நோக்கி நகர்வது அவசியமாகயிருக்கின்றது'.

வரலாற்றினால் எம் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைக்கு நியாயம் செய்யும் விதத்தில், இந்தச் சந்தர்ப்பத்தை எனக்களித்த தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அதன் ஆய்வு மற்றும் திட்டமிடல் பிரிவின் பணிக்குழுவினருக்கும் நான் மிக்க நன்றி உடையவனாக இருக்கின்றேன்.

தனிமனிதர்கள் வரலாற்றை உருவாக்குவதில்லை; மாறாக வரலாறு தான் தனியாட்களை உருவாக்குகிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் எனக்கு இருந்தது. எனினும், வரலாற்றுக்குரிய சாதக மற்றும் பாதக காரணிகளை தனி மனிதர்களே உருவாக்குகிறார்கள் என்பதை இன்று நான் தெளிவாக நம்புகிறேன். அவ்வாறான சாதகமான வரலாறொன்றை எமக்கு வழங்கிச் சென்ற ஒருவராக கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களை நான் இனங்கண்டுள்ளேன். எனவே, அவர் வழங்கிச் சென்ற வரலாற்றைப் பற்றி மட்டுமின்றி அவரைப் பற்றிய விடயங்களையும் நாம் கற்க வேண்டியிருக்கிறது.

## இந்த கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர என்பவர் யார்?

கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர என்ற பெயரில் நாம் அறிந்து வைத்துள்ள இவரது முழுப் பெயர் கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கர என்பதாகும். 1884 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அம்பலாங்கொடை, ரன்தொம்ப என்ற கிராமத்தில் பிறந்த இவர் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை. இவரது தம்பியின் பிரசவத்தின்

போது தாய் உயிரிழந்ததால், சிறுவயதிலேயே இவர் தாயை இழக்க நேரிட்டது. அவரது தந்தைக்கு முதல் விவாகத்தின் மூலம் 5 பிள்ளைகளும் இரண்டாவது விவாகத்தின் மூலம் 4 பிள்ளைகளும் இருந்தனர். இவரது சித்தி இவரைச் சிறந்த முறையில் பராமரித்த போதிலும், இள வயதிலேயே தாயை இழக்கும் துர்ப்பாக்கியம் இவருக்கு ஏற்பட்டிருந்தது.

இவரது தந்தை பௌத்தராக இருந்தபோதிலும் தாயார் இங்கிலாந்து திருச்சபையின் பக்தராக இருந்தார். இந்தப் பின்னணியில் கிறிஸ்தோபர் வில்லியம் விஜேகோன் ஆகிய இவர் கிறிஸ்தவராகவே ஞானஸ்நானம் பெற்றிருந்தார். எனினும் 1917 இல் இவர் பௌத்த சமயத்தை ஒழுங்கு முறையாகத் தழுவிக்கொண்டார். இவரது மிக நெருங்கிய கிறிஸ்தவ நண்பர்களின் கூற்றுப்படி இந்த மதமாற்றம் அறிந்து, தெளிந்தன காரணமாக ஏற்பட்டதேயன்றி அரசியல் நோக்கம் கொண்டதாக இருக்கவில்லை. அத்தோடு, அவர் தனது பிரதேச சூழலில் இருந்து பௌத்த சமயத்தையும் சிங்களம், பாலி ஆகிய மொழிகளையும் கற்றுக்கொண்டார்.

ஆரம்பத்தில் அவர் அம்பலங்கொட வெஸ்லி கல்லூரியில் கெட்டிக்கார மாணவராக இருந்தார். அங்கு நிகழ்ந்த மூவாண்டுப் பரிசளிப்பு விழாவின் போது, அப்போதிருந்த சிறந்த கணித ஆசிரியரும், காலி ரிச்மண்ட் கல்லூரியின் அதிபருமான வண. பிதா டீ. எச். டரல் அவர்களின் அவதானத்துக்கு இவர் உட்பட்டார். வண. பிதா டரல் அவர்கள் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் முதல்தர சித்தி பெற்றிருந்த ஒருவர். அவ்விழாவின்போது 'உமக்குக் கிடைக்கும் பரிசுகளை வீட்டுக்கு எடுத்துச் செல்ல மாட்டு வண்டி ஒன்று தேவைப்படுமே' என வண.பிதா அவர்கள் இவரிடம் கூறியதாகப் பதியப்பட்டுள்ளது. ரிச்மண்ட் கல்லூரியின் திறந்த புலமைப் பரிசிலுக்கு கன்னங்கர அவர்களைத் தயார் செய்யுமாறு வெஸ்லி கல்லூரி அதிபரிடம் வண. பிதா கேட்டுக்கொண்டார். பிற்காலத்தில் கன்னங்கர அந்தப் புலமைப் பரிசிலினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அவரது வாழ்க்கையை ஆராயும்போது அதன் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வு, 14 வயதில் நிகழ்ந்த, அவரது வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக அமைந்த ரிச்மண்ட் கல்லூரியின் அதிபர் பிதா டீ. எச். டரல் அவர்களின் சந்திப்பாகும்.

பிதா டரல் அவர்கள் மாணவர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களைப் புலமைப் பரிசிலுக்கு வழிநடத்தியதன் காரணமாக, திறந்த போட்டி ஒன்றின் பின்னர் இலவச விடுதி மற்றும் உணவு வசதிகள் கொண்ட புலமைப் பரிசிலைப் பெற்று ரிச்மண்ட் கல்லூரிக்கு அவர் அனுமதி பெற முடிந்தது. இந்த 'இலவசமான கல்வி, விடுதி வசதி, உணவு என்பவற்றைக் கொண்ட புலமைப் பரிசில்'தான் பிற்காலத்தில் அவரினால் தேசத்துக்கு வழங்கப்பட்ட இலவசக் கல்விக்கு அத்திவாரமாக அமைந்தது என நான் நம்புகிறேன்.

எனினும், இந்த நிலையில்கூட அவரது வாழ்க்கைப் பாதை சுகபோகமானதாக அமைந்து விடவில்லை. முப்பது வருட சேவையின் பின்னர் அவரது தந்தை ஓய்வூதியத்துடன் தன் தொழிலை இழந்ததனால் பலவிதமான பொருளாதாரக் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் நோக்கும் போது, அவரது பிள்ளைப் பருவம் சௌகரியமும் செல்வமும் நிரம்பியதாக இருக்கவில்லை என்பதையும் கஷ்டங்களுக்கு மத்தியில் கட்டி எழுப்பப்பட்டது என்பதையும் இன்றைய மாணவர் பரம்பரை நன்றாக விளங்கிக் கொள்வது அவசியம் என இங்கு நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அவர் கற்றலில் மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் சிறந்த திறமைகளைக் காட்டிய கெட்டிக்கார மாணவராக இருந்தார். கேம்பிரிட்ஜ் கனிஷ்ட பரீட்சையில் எண் கணித பாடத்தில் இலங்கையர் பட்டியலில் மாத்திரமன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பட்டியலிலும் முதலிடம் பெற்றிருந்தார். அவர் கிரிக்கெட் அணியின் தலைவராகவும், உதைபந்தாட்ட அணியின் உறுப்பினராகவும் விவாதக் குழு உறுப்பினராகவும் இருந்தார். பாடசாலையில் தயாரிக்கப்பட்ட 'வெனிஸ் நகர

வணிகன்’ என்ற நாடகத்திலும் அவர் பிரதான பங்கேற்று நடித்தார். இந்த வகையில் நோக்கும்போது அவர் வெறுமனே புத்தகப் பூச்சியாக இருக்காமல் பாடங்களுக்குப் புறம்பான செயற்பாடுகளிலும் ஈடுபட்ட ஒருவர் என்பது தெளிவாகிறது. எனினும், கன்னங்கர என்ற மாணவரினதும் இன்றைய பெரும்பாலான மாணவர்களினதும் வாழ்க்கைகளுக்கு இடையே பாரதூரமான வேறுபாடுகள் இருக்கின்றன என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

எப்படியிருப்பினும், அக்காலத்தில் வெளிநாட்டுக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு அரச புலமைப் பரிசில் ஒன்றை பெற்றுக் கொள்வதுதான் ஒரே ஒரு வழியாக இருந்தது. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ரிச்மண்ட் கல்லூரியின் 12 மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்த போதிலும் மாணவர் கன்னங்கரவினால் அந்தச் சவாலில் வெற்றி பெற முடியவில்லை. அதன் மூலம் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் வாய்ப்பை இழந்துவிட்டபோதிலும் அவர் தமது வாழ்க்கைப் பாதையில் தைரியத்தை இழக்கவில்லை. இதற்குப் பதிலாக இலங்கையிலேயே சட்டக் கல்லூரியில் சட்டம் பயில்வதை அவர் தேர்ந்தெடுத்தார்.

ரிச்மண்ட் கல்லூரியில் கணித ஆசிரியராகவும் சிரேஷ்ட விடுதிப் பொறுப்பாசிரியராகவும் பொறுப்பேற்குமாறு, அவருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த பிதா டரல் அவரிடம் வேண்டிக் கொண்டார். அவர் அப்பொறுப்புக்களை ஏற்று செவ்வனே நிறைவேற்றினார். எனினும், அவருக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த பிதா டரல் அவர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து அவர் கொழும்புக்கு வந்தார். இக்காலகட்டத்தில் அவர் பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி, வெஸ்லி கல்லூரி, மெதடிஸ்ட் கல்லூரி என்பவற்றில் பகுதி நேர ஆசிரியராகவும் கடமை புரிந்தார்.

எனினும், 1910 ஆகும்போது சட்டத்தரணியாகத் தொழில் புரிவதற்கு தகுதிபெற்றபின்னர், தனதுவழக்கறிஞர்தொழிலைத்தொடங்குவதற்காக காலிக்குச் சென்றார். சிவில் வழக்கறிஞராக வாழ்க்கையை ஆரம்பித்த அவர் சமூக சேவையிலும் ஈடுபட்டார். 1911இல் தான் அவர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் சார்பாக முறையான

அரசியலில் பிரவேசித்தார். அதேபோன்று 1917இல் சட்டசபை வேட்பாளராக பொன்னம்பலம் இராமநாதன் போட்டியிட்டபோது அவருக்காகப் பிரசாரங்களில் ஈடுபட்டார். அவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் வெற்றி பெற்றார். இதன்மூலம் இவர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் நெருங்கிய நண்பரொருவராக மாறினார். 1919இல் இலங்கை தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் நோக்கமான 'அரசியல் சுதந்திரத்தின் சம உரிமைகளுடன் சுயாதீனமான சிறந்ததொரு வாழ்க்கையை நோக்கி தேசத்தையும் பொதுமக்களையும் வழிநடத்துதல்' என்ற விடயம் பற்றித் தெளிவு படுத்துவதில் அவர் ஈடுபட்டார்.

திரு. கன்னங்கர அவர்களின் வாழ்க்கையில் அரசியல் திருப்புமுனையாக அமைந்தது 1923இல் தென் மாகாணப் பிரதிநிதியாக அரசாங்க சபைக்கு அவர் தெரிவு செய்யப்பட்டமையாகும். 1930இல் அவர் இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவராக வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டார். 1931இல் அரசாங்க சபையின் உறுப்பினராக காலியிலிருந்து தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் கல்விச் செயற்குழுவின் தவிசாளராக அதிக பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். 1936இல் மீண்டும் அப்பதவிக்கு வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட அவர் 16 வருடங்கள் அப்பதவியை வகித்தார்.

கன்னங்கர அவர்கள் இலவசக் கல்விக்காகச் செய்த அர்ப்பணிப்பு, போராட்டம் என்பன பற்றிப் பேசும் போது, அப்போதிருந்த அரசியல் சூழல் பற்றியும் குறிப்பிடத்தான் வேண்டும். சர்வஜன வாக்குரிமை கிடைத்தபோதுதான் அவர் அரசியலில் நுழைந்தார். அப்போதிருந்த அரசாங்க சபைக்கு 46 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இருந்தது. பொது மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஏழு அமைச்சர் பதவிகள் உரித்தாகின. இவற்றில் ஒன்றுதான் கல்வி அமைச்சர் பதவி.

1942 இல் ஸர் ஐவோ ஜென்னிங்ஸ் துணைவேந்தராக இருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது அவருக்கு சட்டவியல் துறையில் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. எனினும் 1947இல் இடம்பெற்ற முதலாவது தேசிய பாராளுமன்றத் தேர்தலில், 'இலவசக் கல்வியின் தந்தை' எனப் போற்றப்பட்ட அவர் துராதிஷ்டவசமாகத் தோல்வியுற்றார். அது அவருடைய தனிப்பட்ட தோல்வியா இலங்கைத் தேசத்தின் தோல்வியா எனக் கேள்வி கேட்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அவர் வில்மட் ஏ. பெரேரா என்பவரிடமே தோல்வியுற்றார். ஐக்கிய தேசியக் கட்சியை முதன்மையாகக் கொண்ட தனவந்தர்களினதும் சமதர்மவாதக் குழுக்களினதும் ஆதரவைப் பெற்றே வில்மட் பெரேரா வெற்றி பெற்றிருந்தார். கம்யூனிசக் கட்சிகூட கன்னங்கர அவர்களின் தேர்தல் முயற்சிகளுக்கு எதிராகவே செயற்பட்டது.

இந்த அளவுக்குப் பாரிய சமூகப் புரட்சியொன்றினை நிகழ்த்திய இந்த மாமனிதருக்கு சர்வஜன வாக்கெடுப்பின் காரணமாக நிகழ்ந்த கதியைப் பற்றியும் அதன் பின்னணிபற்றியும், அதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் பற்றியும் நான் ஆராய முடியாத விதத்தில் காலம் குறுக்கே நிற்கிறது. எனினும், இது இலங்கை அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த பாரதூரமானதோடு பரிகாசிப்பு அல்லவா என எனது உள்ளம் வினாத் தொடுக்கின்றது. எனினும் 1952இல் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அவர் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். எனினும், அவருக்கு கல்வி அமைச்சர் பதவி கிடைக்காமல் போனது ஏன் என்பது ஒன்றல்ல இரண்டு தடவை சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயமாகும். அவருக்கு 72 வயது பூர்த்தியான போது, அதாவது 1956 ஆம் ஆண்டு அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற போதிலும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினராகச் சேவையாற்றினார். தேசத்தின் கல்வி தொடர்பாக, அவரிடமிருந்த அரசியல் கடந்த அர்ப்பணிப்பை இது நன்கு எடுத்துக்காட்டுகிறது.

1923 இல் சட்டத்தரணியாகத் தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த அவர், அரசியலில் பிரவேசிக்கும் போது பொருளாதாரத்தில் சுபிட்சம் அடைந்த நிலையில் இருந்தார். எனினும் ஓர் அமைச்சராக 20 வருடங்களைக் கழித்து, அரசியலின் அடிப்படையாக இருக்க வேண்டிய மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த 40 வருட காலத்தில் அவருடைய பொருளாதார உறுதிநிலை சீர்குலைந்து போயிற்று. அரசியல் என்பது தனிப்பட்ட முறையில் செல்வம் சேர்ப்பதற்கான ஒரு வாய்ப்பு அல்ல என்பதை அவர் தெளிவாக நிரூபித்தார். 1963இல் அவரது வாழ்வாதாரத்திற்காக இலங்கை அரசினால் ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அக்காலப் பகுதியில் அது பெறுமதிமிக்க ஒரு தொகைதான். அதன் பின்னர் அவர் சமர்ப்பித்த மனுவொன்றைக் கவனத்தில் கொண்டு, 1965இல் பாராளுமன்றம் அவரது ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக ஜீவனாதாரத் தொகையாக மாதாந்தம் 500 ரூபாவை அங்கீகரித்தது. இது பின்னர் 1000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டது. இலவசக் கல்வியின் தந்தை என மதிக்கப்படும் இந்த சிரேஷ்ட இலங்கைப் பிரஜை நாட்டு மக்களால் பெரிதும் கண்டுகொள்ளப்படாத நிலையில் 1969 செப்டம்பர் 29ஆம் தேதி காலமானார்.

இச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயமொன்று இருக்கிறது. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர ஞாபகார்த்த உரைத் தொடரில் 28 ஆவது உரையை நிகழ்த்திய சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன குறிப்பிட்ட ஒரு விடயம் தான் அது. அவர், பேராசிரியர் நாரத வர்ணசூரிய குறிப்பிட்ட இரண்டாவது கூட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர். அதாவது, ‘கடந்த காலத்தில் கன்னங்கர சீர்திருத்தங்களின் மூலம் நேர்வகையான சமூகமென்றும் சமூக மாற்றம் ஒன்றும் ஏற்பட்டதை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் கோள மயமாகியுள்ள திறந்த பொருளாதாரமொன்றைக் கொண்ட தற்போதைய சூழலில் அவை பொருத்தமற்றவை’ எனக்கருதும் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன குறிப்பிட்டது போல், 'இன்று அனைத்து அரசியல் கட்சிகளும், கல்வியுடன் தொடர்புடைய எல்லா அமைப்புக்களும், அரசு அல்லது தனியார் துறையைச் சேர்ந்த எல்லாத் தொழிற்சங்கங்களும், ஓரளவேனும் கல்வியைப் பெற்ற ஒவ்வொரு தனி நபரும், இலவசக் கல்வியானது சமூக நலனுக்கு பங்களிப்புச் செய்கின்றது எனக் கருதி அதனைப் பாதுகாப்பதற்காக முன்னின்று கோஷமிட்டுக் கொண்டிருக்கின்றனர். எனினும், கூட்டு மொத்தமாக நாடும் அரசியல் கட்சிகளும் அவற்றோடு தொடர்புடைய மாணவர் இயக்கங்களும் இலவசக் கல்வியை பற்றிப் பேசியவாறு கோசமிடுகிறார்கள். ஆனால், அவர்கள் எவரும் மேற்படி பேசுபொருளில் கலாநிதி கன்னங்கர அவர்களுக்குரிய இடத்தை வழங்குவதில்லை. கலாநிதி கன்னங்கர அவர்களின் பிறந்த நாளில் அவரை நினைவுகூரும் எந்த ஒரு பல்கலைக்கழகம் பற்றியோ அமைப்பு பற்றியோ நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. எனினும் அவர்கள் அனைவரும் இலவசக் கல்வியைப் பாதுகாக்கக் கோஷமிடும் போராளிகளாக இருக்கின்றனர். எனவே கே. எச். எம். சுமதிபால அவர்கள் தமது (History of Education in Sri Lanka, 1796-1965) என்ற நூலில் குறிப்பிடுவது போன்று, 'கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்கள் இன்று மறக்கப்பட்டுவிட்ட ஒரு நபராக இருப்பது மட்டுமன்றி, இலவச கல்வியின் குழந்தைகள் அவருடைய நோக்கத்தை அர்த்தமற்றதாக்கி, தவறான திசையில் செலுத்தி அதனை பகுதியளவில் நாசம் செய்தும் இருக்கிறார்கள்.'

இந்த வரலாற்று ரீதியான பரிகசிப்பு அதற்கு அப்பாலும் சென்றுள்ளது. கொரோனா பெருந்தொற்றின்போது முழுச் சிறுவர் பரம்பரைக்கும் ஏற்பட்ட கல்வி வாய்ப்பு இழப்பினை முடிந்த அளவு தவிர்த்துக் கொள்வதற்காக, குறைபாடுகளுக்கு மத்தியிலும் மேற்கொள்ளப்பட்ட தொலைக்கல்வி முயற்சிகள் மூலம் பிள்ளைகளுக்கு உதவ முன்வந்த பெரும்பாலான ஆசிரியர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி நடந்துகொண்ட தொழிற் சங்கத் தலைவர்களின் நடத்தை இந்த அவல நிலையை மேலும் தெளிவுபடுத்துகிறது. அந்தத் தலைவர்கள் அனைவரும் கன்னங்கர அவர்களின் இலவச கல்வியின் நன்மைகளைப் பெற்றவர்களாக

இருந்த போதிலும், ஆசிரியர் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தாம் பெற்ற இலவசக் கல்வியின் நன்மைகளை திருப்பி எதிர்காலச் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக அவற்றை அவர்களுக்கு கிடைக்காமல் செய்வதற்கு முன் நிற்பது கன்னங்கர அவர்களின் இலவசக் கல்வி வரலாற்றில் அவர் விடயத்தில் செய்யும் பாரதூரமான பரிகசிப்பாக அமையாதா என வினவ வேண்டி இருக்கிறது. இந்த நிகழ்வு தெளிவாக எடுத்துக்காட்டுவது என்ன? அவர் எதிர்பார்த்தபடி, கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குவதன் மூலம் தன்னைத் தாண்டி சிந்திக்க கூடிய, தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் இலங்கை நாட்டுக்கும் அதற்கு அப்பாலும் வழங்கத் தயாரான, பரோபகார சிந்தையுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்கு கன்னங்கர சீர்திருத்தங்கள் தவறிவிட்டனவா? அப்படியில்லாவிட்டால், கன்னங்கர சீர்திருத்தங்களினால் போசிக்கப்பட்ட சந்ததியினர், கன்னங்கரவுக்கு பிந்திய காலத்தின் பொறுப்புக்களை உதாசீனம் செய்து விட்டனரா? அவ்வாறன்றி, குறுகிய அரசியல் நிகழ்ச்சிநிரல்களின் மத்தியில் தேசிய நிகழ்ச்சிகள் பின் தள்ளப்பட்டு விட்டனவா? இந்தக் கேள்விகள் கேட்கப்பட வேண்டிய காலம் வந்திருக்கிறது.

### அவர் இலங்கை மக்களுக்கு வழங்கிய இலவச கல்வி என்பது எப்படிப்பட்டது?

கன்னங்கர அவர்களுடைய கல்விச் சீர்திருத்தங்களின் கருப்பொருள் பற்றிப் பரிசீலனை செய்யும்போது, அக்காலத்திலிருந்த சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி, அப்போதிருந்த கல்வி வாய்ப்புகள் மற்றும் எழுத்தறிவு மட்டம் என்பவற்றை மறந்து விட்டு, இன்றுள்ள சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள், இன்றைய கல்வி வாய்ப்புகள் மற்றும் எழுத்தறிவு மட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஆராய முற்படுவது, கன்னங்கர அவர்களின் சீர்திருத்தங்களுக்கு நாம் இழைக்கும் தெளிவான அநியாயமாகும். அந்தச் சீர்திருத்தங்களின் அடிப்படை உத்தியாக அமைந்தது கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதே. 1930களில் பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய சிறார்களில் பாதிக்கு மேற்பட்டவர்களும் பெண்பிள்ளைகளில் முக்கால்

பகுதியினரும் பாடசாலைக் கல்வியைப் பெறாமல் இருந்தனர்.

அன்றிருந்த சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பினுள் அந்த வாய்ப்பு கிடைக்காமற் போனதற்குக் காரணமாக அமைந்த ஏற்றத்தாழ்வுகள் பல இருந்தன. கலாநிதி ஸ்வர்ணா ஜயவீர அவர்களால் 1989 அக்டோபர் 13ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட 'கல்வி வாய்ப்புகளை விரிவு படுத்தல்: முடிவு பெறாப் பணிகள்' என்ற இரண்டாவது கன்னங்கர ஞாபகார்த்த உரையில் குறிப்பிடப்பட்டபடி 'கலாநிதி கன்னங்கர அவர்களால் முன்வைக்கப்பட்ட பெரும்பாலான கோட்பாடுகள் பிரதேச, சமூக, பொருளாதார, இன, மத அடிப்படையில் சமநிலை குலைந்த, ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆதிக்கம் செலுத்திய காலனித்துவ கல்விக் கொள்கைகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட எதிர்வினையொன்றைப் போன்று அமைந்திருந்தன. 1931 இல் கொள்கையாக்கம் செய்யும் பொறுப்பு இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட போது, உயர்தரமானவை எனக் கருதப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகள், சுதேச மொழிகள் மூலம் கற்பிக்கப்பட்ட குறைகள் நிறைந்த பொதுக் கல்வி என இருவிதக் கல்வி முறைகள் காணப்பட்டன. அத்தோடு, கல்வி அதிகாரக் கட்டமைப்பில் கிறிஸ்தவ ஆதிக்கம், நாட்டினுள் சமூக, பொருளாதார விருத்தியில் ஏற்றத்தாழ்வு, நாட்டின் தெற்கு மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு கூடுதலான வாய்ப்புக்கள், காலனித்துவ பொருளாதாரத்தின் தேவைகள் எனப் பல காரணிகள் காணப்பட்டன. 1940-47 காலப்பகுதியில் நாடு பூராவும் கிராமப் பகுதிகளில் 54 மத்திய மகா வித்தியாலயங்களை உருவாக்குவதன் மூலம், அதுவரை நகர்ப் புற ஆங்கில பாடசாலைகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்த இடைநிலைக் கல்வி வசதிகளை நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. 'பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குவது' அவரது நோக்கமாக இருந்தது.

இதனடிப்படையில் கன்னங்கர அவர்களின் கல்வி சீர்திருத்தங்களின் பிரதான கருப்பொருளைப் பரிசீலனை செய்யும் போது, அவர் அரசாங்க சபைக்கு முன்வைத்த சிறப்புக் குழு அறிக்கையில் காணப்பட்ட

பின்வரும் எண்ணக்கரு தெளிவாகிறது. அதாவது ‘இந்நாட்டின் உயர் குடியினரதும் செல்வந்தர்களினதும் பிறப்புரிமைச் சொத்தாகக் கருதப்பட்ட, அதிக விலை கொடுத்து பெறப்பட வேண்டியிருந்த கல்வியை, இந்நாட்டில் எதிர்காலத்தில் பிறக்கப்போகும் ஏழைச் சிறார்கள் ஒவ்வொருவரும் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும், முத்திரையிடப்பட்ட கவசம் ஒன்றினுள் மூடி வைக்கப்பட்டுள்ள கிரந்தமொன்றுபோல் தோன்றுகின்ற கல்வியை, சமயம், சாதி, வகுப்பு, குலம் போன்ற எவ்வித பேதங்களும் இன்றி அனைவரும் வாசிக்கக் கூடிய திறந்த கடிதமொன்றாக மாற்ற முடியுந்துள்ளது என இந்த கண்ணியம் மிக்க சபையில் பிரகடனப்படுத்த முடியுமாயின், செங்கட்டியால் நிர்மாணிக்கப்பட்ட ரோமாபுரியை வெண் பளிங்குக் கற்களால் நிர்மாணித்து விட்டதாகக் கூறிய பேரரசர் ஆகஸ்டஸை விடக் கூடுதலாக நான் பெருமிதம் அடைவேன்.’

கன்னங்கர அவர்களின் வாழ்க்கைச் சரிதையை எழுதிய கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் கே. எச். எம். சுமதிபால அவர்களின் கூற்றுப்படி சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர அவர்கள் ஆரம்பித்த கல்விச் சீர்திருத்தங்களை பிரதானமாக இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். அவையாவன 1931 முதல் 1939 வரையிலான முதலாவது கட்டம் 1939 முதல் 1941 வரை செல்லும் இரண்டாவது கட்டம். இவற்றுள் முதல் கட்டம் செயற்குழுவின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலமாகும். இதனைச் சிறிய அளவிலான சீர்திருத்தக் கட்டம் என அழைக்கலாம். இச் சீர்திருத்தங்களில் எண்ணக்கரு என்ற வகையில் முக்கிய இடத்தைப் பெறுவது 1932இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஹந்தஸ்ஸ இயக்கம் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட கிராமிய கல்விச் செயற் திட்டமாகும். இங்கு கிராமிய சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பொருத்தமான பயனுள்ள செயல்முறை அனுபவங்கள் பொதுக் கல்வியோடு சேர்க்கப்பட்டிருந்தன.

பேராசிரியர் நாரத வர்ணசூரிய அவர்களின் உரையில் அவர் குறிப்பிட்ட ‘அபிவிருத்திக்கான கல்வி’ என்னும் எண்ணக்கருவின் ஆரம்பம் இந்தக் கட்டமே எனக் குறிப்பிடலாம். நிச்சயமாக கன்னங்கர அவர்களின்

தூரநோக்குள்ள சிந்தனை கிராமிய மக்கள் தொடர்பாக அவர் காட்டிய கரிசனையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இதன் இரண்டாம் கட்டம் என கருதப்படக் கூடியது 1939 முதல் 1946 வரையான காலப் பகுதியாகும். இரண்டாவது கட்டத்தில் அடுத்து வந்த ஏழு ஆண்டுகளுக்குள் கிராமியப் பாடசாலைகளின் எண்ணிக்கை 250க்கும் மேற்பட்டதாக விரிவடைந்தது. எனினும் வறட்சி, மலேரியாப் பெருந்தொற்று, இரண்டாம் உலகப்போர் என்பவற்றின் விளைவாக ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக சீர்திருத்தங்களைப் பாரிய அளவில் விரிவாக்குவதற்கு கன்னங்கர அவர்களால் முடியவில்லை என்பது உண்மையே.

கன்னங்கர அவர்கள் அறிமுகப்படுத்திய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிப் பெருமளவில் எழுதப்பட்டிருக்கிறது. கலாநிதி உபாலி சேதர அவர்கள் ஆற்றிய 27ஆவது ஞாபகார்த்த உரையின்போது முன்வைத்த விடயங்களின் சுருக்கம் பின்வருமாறு.

1. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவச மானதாக இருக்க வேண்டும்.
2. இடைநிலை, சிரேஷ்ட, செய்முறை என மூன்று வகையான பாடசாலைகளை உருவாக்குதல்.
3. ஆரம்ப நிலையில் கற்பித்தல் ஊடகமாக சுய மொழிகளையும், கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் இருமொழி மூல அல்லது ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளையும், சிரேஷ்ட இடை நிலையிலும் உயர் கல்விக்காகவும் ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளையும் அறிமுகப்படுத்தல்.
4. விடுதி வசதிகள் கொண்ட மத்திய மகா வித்தியாலயங்களையும் சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்கு அனுமதியை அதிகரிக்கச் செய்வதற்காக புலமைப் பரிசில் முறை ஒன்றையும் உருவாக்குதல்.
5. சமயக் கல்வியை அறிமுகம் செய்தல்.

6. எழுத்தறிவற்ற வளர்ந்தவர்களுக்காக வளர்ந்தோர் கல்வி வழங்கும் இரவுப் பாடசாலை வசதிகளை ஏற்படுத்தல்.

7. ஆசிரியர்களுக்காக மாதாந்த சம்பள முறையொன்றை நிறுவன மயப்படுத்துதல்.

8. கலைத்திட்டத்தையும் பரீட்சைகளையும் தேசிய மயமாக்கல்.

9. சுயாதீனமான பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல்.

அரசாங்க சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் 1944 அக்டோபர் மாதத்தில் இந்தக் கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும் இச்சீர்திருத்தங்களின் ஊடாக ஆலோசிக்கப்பட்ட செய்முறைப் பாடசாலை முறை அமுல்படுத்தப்படவில்லை.

அத்தோடு, 1944ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாக பாடசாலைக்குச் செல்வதை வசதிப்படுத்தும் செயன்முறைகளும் உருவாக்கப்பட்டன. பாடசாலைகளின் எண்ணிக்கை, சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஆரம்ப நிலை மற்றும் இடைநிலைக் கல்வியைப் பூரணப்படுத்துவோரின் எண்ணிக்கை என்பன குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன. 1944-48 காலப்பகுதிக்குள் புதிதாக 400 பாடசாலைகள் உருவாக்கப்பட்டதோடு பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர் தொகை 1.2 மில்லியனை நெருங்கியது.

எனினும், சுருக்கமாக விடயங்களை எடுத்துக் கூறுவதற்கு அப்பால் சென்று, கன்னங்கர அவர்களின் பரந்த நோக்கினைப் பகுப்பாய்வு செய்வதற்கு எனக்குக் கிடைத்துள்ள நேரம் எவ்விதத்திலும் போதுமானதல்ல. எவ்வாறாயினும், 25ஆவது ஞாபகார்த்த உரையை நிகழ்த்திய ஆர். எஸ். மெதகம அவர்களின் உரையில் அடங்கியிருந்த சில விடயங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் அதனை நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு.மெதகம அவர்கள் குறிப்பிடுவது போன்று, 'பிற்காலத்தில் கல்வியில் திருத்தங்கள் கொண்டுவர நாடியோர் அமுல்படுத்த

முயற்சித்த கருத்துக்கள் பல, இலங்கையின் கல்வி பற்றிய சிறப்புக் குழுவின் அறிக்கையில் (ஆவணம் XXIV 1943) அடங்கி இருந்தன. துரதிர்ஷ்டவசமாக அந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் கலாநிதி கன்னங்கர அவர்களுக்கு கல்வித்துறை முன்னோடியாக இருந்து செயற்பட முடியவில்லை.

தேசிய ஒருங்கிணைப்பை விருத்தி செய்வது தொடர்பாக கல்வியின் வகிபங்கு பற்றியும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார். இன்று எல்லா வகையிலும் பிளவுபட்டுப் போயுள்ள இந்த நாட்டில், அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்த விடயங்களைச் சுட்டிக் காட்டுவது மிக முக்கியம்.

'மக்களிடையே உள்ள பல்வேறு பிரிவுகளை ஒரே தேசிய இனமாக இணையச் செய்வது எமது முதன்மைத் தேவையாகும். பல்வேறு சமய, இன மற்றும் மொழிசார் மரபுகளைக் கொண்ட கூட்டத்தினர் ஒரே நாட்டில் வாழ்வது இலங்கைக்கு மாத்திரமுரிய பண்பு அல்ல. எம்மைப் போன்று பல்வேறு மக்கள் கூட்டங்களைக் கொண்ட சனத்தொகையொன்றில்கூட ஒரே தேசிய இனமாக ஒரே கோட்பாட்டை விருத்தி செய்வது சிரமமான செயலல்ல என்பதை வரலாறு எடுத்துக் காட்டியுள்ளது. உண்மையிலேயே எமது பண்பாட்டில் அனைவருக்கும் பொதுவான அம்சங்கள் நிறைய இருக்கின்றன. கல்வி விருத்தியின் ஊடாகக் கிடைத்த ஊக்கத்தின் காரணமாக தேசிய ஒருங்கிணைப்புக்குரிய கட்டம் ஒன்று இப்போதும் எம்மிடையே நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் எதிர்காலக் கல்வியை கட்டமைக்கும் போது, இந்தப் பொது அம்சங்களை விருத்தி செய்து எமது சனத்தொகை பற்றிய கருத்துக்கள் ஊட்டப்பட வேண்டும்.'

'புரிந்துணர்வு மற்றும் சகிப்புத்தன்மை என்பவற்றின் அடிப்படையிலேயே நாம் எதிர்பார்க்கின்ற தேசியம் உருவாக்கப்பட வேண்டும். எம்மைப் போன்ற பல்வகைமை கொண்ட சமூகமொன்றில் வேறு முறைகளைப் பின்பற்றினால் தேசிய ஐக்கியத்திற்கு பதிலாக தேசிய குழப்ப நிலையொன்றே உருவாகும். ஒரு கூட்டத்தினரால் மற்றவர்கள் மீது காட்டப்படப் வேண்டிய சகிப்புத்தன்மை, ஏனைய

இனத்தவர் தொடர்பாகவும் காட்டப்படுவது அவசியம் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்வதைக் காண வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். உண்மையில் சகிப்புத்தன்மை என்பது எமது பிரஜைகளின் ஒரு சிறப்புப் பண்பாகும். இந்தத் தீவினிலே பல்வேறு மக்கள் கூட்டத்தினர் நெடுங்காலமாக சமாதானத்தோடும் நட்புறவோடும் வாழ்ந்திருக்கின்றனர். சகிப்புத்தன்மையும் எல்லா இனத்தவருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் அபிலாசையும், புதிய கல்வி கட்டமைப்பு மூலம் ஆற்றப்படும் கற்பித்தலுக்கு ஊக்கிகளாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.' (விசேட குழு அறிக்கை, XXIV, பக்கம் 10, 1943).

திரு. மெதகம அவர்கள் சுருக்கமாக எடுத்துக் காட்டிய பின்வரும் பகுதியும் முக்கியமானது. அதாவது, 'சமூகமொன்றுக்கு மிக அத்தியாவசியமான நபர் யாரெனில், புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய, அவற்றின் முன்னிலையில் தாமே தீர்வுகளைக் கண்டு கொள்ளக் கூடியவரே அவர். மேதைமையை ஒளிரச் செய்கின்ற தீப்பொறி, ஆக்கத் திறனின் தீப்பொறியே.' (சிறப்புக் குழு அறிக்கை, XXIV, பக்கம் 12, 1943).

இவ்வாறான தூர நோக்கோடு இலவசக் கல்வியை ஆரம்பித்த ஒரு நாட்டில் அதற்கு முற்றிலும் முரணான முரண் நடத்தை கொண்ட பண்பாடொன்று உருவாகியது எப்படி? இன்று நாம் எதிர்கொண்டுள்ள ஆழமான குழப்ப நிலையின் மூல வேர் எங்கே இருக்கிறது? அதற்காக எடுக்கக்கூடிய நிலையான தீர்வுதான் என்ன?

இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடுவதற்கு முன்னர் கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களின் காலம் தொட்டு இதுவரை கல்வி சீர்திருத்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், கல்வித்துறையின் முக்கியமான திருப்பு முனைகள் என்பன பற்றிய சுருக்கமொன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

## கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களின் காலம் தொட்டு இதுவரை நிகழ்ந்த கல்வி மறு சீராக்கங்களும் திருப்புமுனைகளும்.

**கல்வி மறுசீராக்கம்**

| வருடம் | சீர்திருத்தம் | பெறுபேறு |
|---|---|---|
| 1931 | ஹந்தெஸ்ஸ கிராமிய செயல் திட்டம் | கலைத்திட்டத்தை தேசியப் போக்குள்ளதாக மாற்றும் ஒரு முயற்சி. 6ம் ,7ம் ,8ம் வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கை திறன்கள், சுகாதாரக் கல்வி, தமது பிரதேசத்தைப் பற்றிய கற்றல், அழகிய கல்வி. பரீட்சார்த்த முயற்சி வெற்றி பெற்றதால் இது 253 பாடசாலைகளுக்கு விரிவாக்கப் பட்டது. மத்திய கல்லூரிக் கலைத்திட்டத் திலும் இப்பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. |
| 1942 | இலங்கை பல்கலைக்கழக கட்டளைச் சட்டமூலம் | கொழும்பில் இலங்கை பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. |
| 1947 | 26ம் இலக்க கட்டளைச் சட்டமூலம் | இலவசக் கல்வி அமுலாக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 1950 | கல்வி வெள்ளை அறிக்கை | ஆரம்ப மட்டத்தில் உடல் விருத்தி, சிறந்த பழக்கவழக்கங்களின் தேவை, செயல்முறை வேலைகளின் தேவை என்பன வலியுறுத்தப்பட்டன. |
| 1952 | பல்கலைக்கழகத்தை பேராதனைக்கு கொண்டு செல்லல் | |
| 1956 | சுற்றுநிருபங்கள் 43 மற்றும் 48. | 1957 முதல் பாடத் தொகுதிகளை ஏற்படுத்தலும் தொழிற்பாடுகளை உள்ளடக்கலும். |
| 1959 | வித்யோதய மற்றும் வித்யாலங்கார பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படல். | |
| 1960 | 5ம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட விதிமுறைகள்) சட்டமூலம். | பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றலும் அனைத்து பாடசாலைகளிலும் பொதுக்கலைத் திட்டத்தின் அறிமுகமும். |

| | | |
|---|---|---|
| 1961<br>மார்ச் 2 | 8ம் இலக்க கொண்ட உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் பற்றிய விசேட மேலதிக விதிமுறைகள் சட்டமூலம். | |
| 1961 | தேசிய கல்வி ஆணைக் குழுவின் உருவாக்கம் | • ஜே. ஈ. ஜெயசூரிய அவர்களின் தலைமை யில் உருவாக்கப்படுதல்.<br>• 1964 கல்வி வெள்ளை அறிக்கை மூலம் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தல். |
| 1963 | தொழினுட்ப கல்வி ஆணைக் குழுவின் அறிக்கை | தொழினுட்ப மற்றும் வணிகக் கல்வி பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப்படல். |
| 1966 | • பொது மற்றும் தொழினுட்பக் கல்வி சீர்திருத்த முன்மொழிவுகள் பற்றிய வெள்ளை அறிக்கை.<br>• கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் உருவாக்கப்படுதல். | 1967இல் பௌத்தாலோக மாவத்தயில் பாடவிதான அபிவிருத்தி நிலையம் உருவாக்கப்படல். |

| | | |
|---|---|---|
| 1971 | உயர்கல்வி மறு சீரமைப்புக்கள் (ஒஸ்மண்ட் ஜயரத்ன அறிக்கை) | தொழில் நோக்குக் கொண்ட பல்கலைக்கழகப் பாடநெறிகளை ஆரம்பித்தல். உ+ம். ஆசிரியர் தொழில், தோட்ட நிர்வாகம். |
| 1972 | 1ம் இலக்க பல்கலைக்கழக சட்டமூலம். | தனி ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்து வளாக முறையை உருவாக்குதல் |
| 1972 | கல்வியில் புதியபாதைப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மறுசீரமைப்பு. | • பாடசாலைக்கு அனுமதி பெறும் வயதை 6 ஆக்குதல்.<br>• தொழில் முன்னிலை பாடம் அறிமுகப்ப டுத்தப்படல்.<br>• தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சை அறிமுகப்ப டுத்தப்படல். |
| 1977 | Towards Relevance in Education அறிக்கை வெளியீடு. (போகொட பிரேமரத்ன அறிக்கை) | |

| | | |
|---|---|---|
| 1978 | | • பாடசாலைக்கு அனுமதி பெறும் வயது 5 ஆக்கப்படுதல்.<br>• தொழில் முன்னிலைப் பாடத்துக்கு பதிலாக தொழில்நுட்ப பாடம் அறிமுகப்படுத் தப்படுதல்.<br>• தேசிய கல்விச் சான்றிதழ் பரிட்சைக்கு பதிலாக க. பொ. த. (சா. த) மீண்டும் அறிமுகப்படுத் தப்படுதல் |

| | | |
|---|---|---|
| 1978 | 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டமூலம் | • தனி ஒரு பல்கலைக்கழகம் என்ற எண்ணக்கருவைக் கைவிடுதல்.<br>• கொழும்பு, பேராதனை, களனி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, மொரட்டுவ, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்கள்.<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அமைக்கப்படுதல். |
| 1981 | வெள்ளை அறிக்கை | • கல்விச் மறுசீராக்கம் பற்றிய முன்மொழிவுகள் - பொது, பல்கலைக்கழக, மூன்றாம் நிலை<br>• பாடசாலை கொத்தணி முறை அறிமுகம்.<br>• தேசிய பாடசாலைகள் எண்ணக்கரு<br>• வட்டாரக் கல்வி அதிகாரி பதவிக்கு பதிலாக பழைய கல்வி பணிப்பாளர் பதவி உருவாக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| 1985 | 28ம் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்ட மூலம் | தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்டு கலைதித்திட்டத்தை அமைக்கும் பொறுப்புக்குரிய நிறுவனமாக மாறுதல். |
| 1987 | மாகாண சபை முறை | தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் நிர்வாகம் மாகாண சபைகளுக்கு வழுங்கப்படுதல். |
| 1990 | இளைஞர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை (1ம் அமர்வின் அறிக்கை) | |
| 1991 | 19ம் இலக்க தேசிய கல்வி ஆணை குழு சட்டமூலம் | • கல்விக் கொள்கைகளை ஜனாதிபதிக்கு முன்மொழிவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்படுதல்.<br>• 1992, 2003, 2016 பிரதான அறிக்கைகள் வெளியிடப்படுதல். |
| 1993 | கலைத்திட்ட மறு சீராக்கம் | |

| | | |
|---|---|---|
| 1995 | பொதுக் கல்வி பற்றிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் | |
| 1997 | கல்வி மறுசீரமைப்பு ஆண்டு | 6-14 வயதில் கட்டாயக் கல்வி சட்டவிதிகள் பிரகடனம். |
| 1998 | ஆரம்பக் கல்வி மறு சீரமைப்பு | • தரம் (1, 2, 3, 4, 5) மூன்று கட்டங்களாகப் பிரித்தல்<br>• தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தல்<br>• விளையாட்டும் களிப்பூட்டும் வேலைகளும் செயற்பாடுகள், இருப்பிட அமர்ந்து செய்யும் வேலைகள் என கற்றல் கற்பித்தல் முறைமைகள் மூன்று வகையாக அமைதல். |

| | | |
|---|---|---|
| 1998 | இ.நி.க/103 இலக்கம் கொண்ட 1998.04.09 திகதியிடப்பட்ட 98/15 சுற்றுநிருபத்தின் படி 2000 முதல் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கட்டளை விதிகளை மாற்றியமைத்தல். | • பாடங்களின் எண்ணிக்கை 4 இலிருந்து 3 ஆக குறைக்கப்படுதல்<br>• சகல மாணவர்களும் பொது அறிவுச் சோதனை யில் சித்தி பெற வேண்டியிருத்தல். |
| 1998 | 1998.12.30 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றுநிருபம் 29/98 | ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சியுள்ள அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல். |
| 2002 | பல்கலைக்கழக | |
| 2007 | ED/0/12/06/15/01 இலக்கம் கொண்ட 2006.03.07 திகதியிட்ட சுற்றுநிருபம் | பாடசாலைக் கலைத்திட்டம் E5 மாதிரி அடிப்படையில் திருத்தியமைக்கப்படுதல் |

1947 முதல் கொண்டுவரப்பட்ட மேற்குறிப்பிட்ட கல்விச் சீர்திருத்தங்கள், திருப்பங்கள் என்பவற்றின் மூலம் 21ஆம் நூற்றாண்டுக்கு முகம் கொடுக்கக்கூடிய, தன்முனைப்பைத் தாண்டிச் சிந்திக்கின்ற பிள்ளைகளையும் மனிதர்களையும் உருவாக்குவதற்கும், அதற்குத் தேவையான தேர்ச்சிகளையும் தேவையையும் கொண்ட பிரஜைகள், ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்வியிய லாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர் போதிய அளவில் இந்த நாட்டில் உருவாக்கப் பட்டுள்ளனரா? 'இல்லை' என்பதே கசப்பான உண்மையாகும்.

அன்று கலாநிதி கன்னங்கர அவர்கள் குறிப்பிட்டது போல், 'இந்நாட்டின் உயர் குடியினரதும் செல்வந்தர்களினதும் பிறப்புரிமைச் சொத்தாகக் கருதப்பட்ட, அதிக விலை கொடுத்து பெறப்பட வேண்டியிருந்த கல்வியை இந்நாட்டில் எதிர்காலத்தில் பிறக்கப் போகும் ஏழைச் சிறார்கள் ஒவ்வொருவரும் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும், முத்திரையிடப்பட்ட கவசம் ஒன்றினுள் மூடி வைக்கப்பட்டுள்ள கிரந்தமொன்று போல் தோன்றுகின்ற கல்வியை, சமயம், சாதி, வகுப்பு, குலம் போன்ற எந்தவித பேதங்களும் இன்றி அனைவரும் வாசிக்கக் கூடிய திறந்த கடிதமொன்றாக மாற்ற முடியுந்துள்ளது என இந்த கண்ணியம் மிக்க சபையில் பிரகடனப்படுத்த முடியுமாயின், செங்கட்டியால் நிர்மாணிக்கப்பட்ட ரோமாபுரியை சலவைக் கற்களால் நிர்மாணித்து விட்டதாகக் கூறிய பேரரசர் ஆகஸ்டஸை விட நான் பெருமிதம் அடைவேன்.'

**அவரது அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறி உள்ளனவா?**

கல்வியின் ஊடாக வழங்கப்பட்ட வாய்ப்புகளையும் அறிவு, செல்வத்தையும் கொண்டு, நல்ல மனப்பாங்குள்ள, தன்முனைப்பைத் தாண்டிச் சிந்திக்க கூடிய பிரஜைகள் , ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளை உருவாக்குவதில் அந்தப் பரந்த வாய்ப்புகள் வெற்றி பெற்றுள்ளனவா? அல்லது கன்னங்கர அவர்கள் நினைத்துப் பார்த்திராத விதத்தில் வறிய வகுப்பைச் சேர்ந்த படித்தவர்களை உயர் குடியினராகவும் செல்வந்தர்களாகவும் மாற்றும் செயல்முறைதானா இடம் பெற்றிருக்கிறது? அதே போன்று, உரிமைகளை மட்டும் கோருகின்ற, தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் இரண்டாம் பட்சமாகக் கருதுகின்ற ஒரு கணிசமான தொகையினரின் கைக்கு அதிகாரம் மாறியதுதான் மிச்சமா?

1947 இல் பூச்சியத்திலிருந்து உருவாகிய இஸ்ரவேல் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறியதும், 1947இல் இலவசக் கல்வியை உறுதி செய்த இலங்கை உலகத்தார் முன்னிலையில் வங்கரோத்து

நாடாக மாறியதும், 1948இல் சுதந்திரம் பெறும் போது ஆசியாவிலேயே ஒரு பொருளாதாரத்தில் ஜப்பானுக்கு மாத்திரம் இரண்டாவதாக இருந்த இலங்கை இன்றைய நிலைக்கு வீழ்ச்சி அடைந்ததும் எவ்வாறு நிகழ்ந்தன? அதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எவை என்பது பற்றி மறுபரிசீலனை செய்யாமல் நாம் இந்த நெருக்கடியிலிருந்து விடுதலை பெற முடியுமா? விரிவடைந்த கல்வி வாய்ப்புகளுக்கு சமாந்தரமாக முற்போக்கு மனப்பாங்குகள் விருத்தி அடையாமற் போனது ஏன்?

நாம் புரிந்து கொண்டுள்ளதன்படி, நடத்தையியல் சார்ந்த பொருளியல், மானுடவியல், சமூகவியல், உளவியல் அரசியல் கோட்பாடுகளுக்கு அமையப் பெறப்பட்ட முடிவுகளின் படி, இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்தவை:

- **தூரநோக்கில்லாத அரசியல் தலைமை:** சுதந்திரத்தின் பின்னர், குறிப்பாக 1977 இன் பின்னர் இந்நாட்டை ஆட்சி செய்த, துரநோக்கற்ற அரசியல்வாதிகள் பெரும்பாலானவர்களும் குறுகிய கட்சி அரசியலுமே இந்நெருக்கடிக்கான முதற் காரணமாகும்.

- **அரசியல் விழுமியத் தொகுதியில் காணப்படும் பாரதூரமான குறைபாடு:** பெரும்பாலான அரசியல்வாதிகள் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறுகின்ற பிரதிநிதிகளாக இல்லாமல் இருத்தல்.

- **ஏமாற்றும் ஊழலும்:** அரசியலினூடாக கிடைக்கும் வரப்பிரசாதங்களின் ஊடாக தவறான முறையில் செல்வம் சம்பாதிக்கக்கூடிய ஊழல் மிக்க தொழிலாக அரசியல் மாறியிருத்தல்.

- **பிழையான பொருளாதார கொள்கைகளும் முகாமையும்:** ஏற்றுமதி வருமானத்தைப் பாதுகாத்துக் கொள்ளாமல், இறக்குமதிச் செலவு ஏற்றுமதி வருமானத்தை மிஞ்சிச் சென்று, அந்த இடைவெளியை நிரப்புவதற்காக எதிர்காலச் சந்ததியினரை ஈடு வைத்து வரையறையின்றிக் கடன் பெறுதல்.

- **அரச சேவையின் சீரழிவு:** பண்புமிக்கதொரு சேவையாகத் திகழ்ந்த அரச சேவை வினைத்திறன் அற்றதாகவும் ஊழல் மிக்கதாகவும் மாறி அரசியலுக்கு அடிமையாதல்.

- **பொதுமக்களின் விழுமியத் தொகுதியில் குறைபாடு:** கடமையையும் பொறுப்பையும் இரண்டாம் பட்சமாகக் கருதி உரிமைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, மக்களை வலுவூட்டுவதற்குப் பதிலாக தங்கி வாழும் மனப்பான்மைக்குப் பழக்குவதன் மூலம் வறுமையையும் அறியாமை யையும் அரசியல் இலாபங்களுக்காகப் பேணி வருதல்.

அப்படியாயின், மேற்சொன்ன சகல விடயங்களுக்கும் பொதுக் காரணியாக இருப்பது, தேசிய, பூகோள ரீதியான சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய, தேர்ச்சிகளைக் கொண்ட பயனுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்குத் தேவையான மனப்பாங்குகளை உறுதிப்படுத்தக் கூடிய கல்வி முறைமையொன்று இல்லாமற் போனமை அல்லது பிற்காலத்தில் செய்ய வேண்டியிருந்த கல்விச் சீர்திருத்தங்களை உரிய காலத்தில் நிறைவேற்ற முடியாமல் போனமை ஆகும். இவ்வாறு நிகழ்வதற்குக் ஏதுவாக அமைந்த முக்கிய காரணி அரச கல்விக் கோட்பாடொன்றுக்குப் பதிலாக இடையிடையே மாறி வந்த அரசாங்கங்களின் கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முனைந்தமையாகும். அதேபோன்று மாணவர் இயக்கங்கள், தொழிற் சங்கங்கள் என்பவற்றின் ஊடாக முன்வைக்கப்பட்ட அரசியல் பக்கச் சார்பான எதிர்ப்புக்களும் இதற்குக் காரணமாக அமைந்தன.

இவை அனைத்துக்கும் தீர்வாக அமையக் கூடியது, இலங்கையர் என்ற வகையில் சிந்தித்து செயல்படுத்தப்படும் பண்புத் தரமுள்ள கல்விச் சீர்திருத்தமே.




**தேசத்தின் விடியலுக்காய் இன்று வேண்டப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் யாவை?**

பூகோள ரீதியான நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாது, நாளைய விடியலுக்காக இந்த நாட்டுக்குத் தேவைப்படும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிப் பேச முடியாது. அதாவது, பூகோள ரீதியான பொருளாதார நெருக்கடிகளைப் போன்றே பூகோளப் பெருந்தொற்று நெருக்கடி உட்பட்ட பின்னணியில் இந்த சீர்திருத்தங்கள் குறித்துப் பரந்த ரீதியில் நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இந்தக் கொரோனா பெருந்தொற்று முழு உலகையும் ஆட்டிப் படைத்திருக்கிறது. பிரெஞ்சு நாட்டு நுண்ணுயிரியல் நிபுணரும் சுற்றாடல்வாதியும் மனிதநேயரும் பிற்காலத்தில் அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் சமூக சுகாதார அயனவலயவியற் துறைப் பேராசிரியராக இருந்தவருமான ரினே டுபோஸ் என்பவர் விடுத்த எச்சரிக்கை கவனிக்கத்தக்கது. ‘எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத விதத்தில் இயற்கை எம் மீது எதிர்த் தாக்குதல் நடத்தும்’ என அவர் 1950இல் கூறியிருந்தார். இந்த நிலை 2019இல் உருவாகியது. ‘மனித வர்க்கத்தின் மிக ஆபத்தான நடத்தைகள், அதாவது சுற்றாடல் அழிவு, காடழிப்பு, நுண்ணுயிர் கொல்லி மருந்துகளின் பாவனை, உயிரினங்களின் பல்வகைத் தன்மையை மாற்றி அமைத்தல், இரசாயன மாசடைதல், நகரவாக்கம், சனத்தொகைப் பெருக்கம்,

நிலையான சுற்றாடல் வரம்புகளை மீறிய நுகர்வுரீதியான வாழ்க்கை முறை என்பவற்றின் காரணமாக பெருந் தொற்றுகளுக்கு அப்பாலும் செல்லக்கூடிய சுற்றாடல் அழிவு வலைச் சிக்கலொன்றினுள் மனிதன் மாட்டிக் கொண்டிருக்கின்றான்.'

இயற்கை அனர்த்தங்கள் என நாம் அழைக்கின்ற வெள்ளம், நிலச்சரிவு போன்றவை இயற்கையானவை அல்ல என்பதை எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்?

இந்தக் கசப்பான உண்மைக்கு மத்தியில் 'கல்வி' என்பது மேற்சொன்ன அனைத்துச் சவால்களுக்கும் இடையில் மனித வர்க்கம் தனது இருப்பைக் காத்துக் கொள்வதற்கு, புதிதாக எப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய ஆழமான மறுபரிசீலனையாகும். நாம் எதிர்கொண்டுள்ள பூகோள ரீதியான சவால்களுக்கு மத்தியில், நாம் சிந்திக்கும் விதம், நாம் உணர்ந்து கொள்ளும் விதம், நாம் நடந்து கொள்ளும் விதம் என்பன பற்றி மீளச் சிந்தித்துப் பார்ப்பது கட்டாயமாகியிருக்கிறது.

அப்படியாயின், எதிர்காலத்தில் இலங்கைக் கல்வியினதும் கல்விச் சீர்திருத்தங்களினதும் இலக்காக அமைய வேண்டியிருப்பது, இவ்வாறு உலகினை புதிய பரிமாணங்களில் நோக்கக்கூடிய, மனிதவர்க்கம் பற்றி உணர்வு பூர்வமாக சிந்திக்கக் கூடிய பிள்ளையை, வளர்ந்தவரை, பிரஜையை உருவாக்குவதாகும். பற்றும் ஆற்றலும் கொண்ட இலங்கையர் என்ற வகையில் எமது பெருமைக்குரிய வரலாற்றை விடச் சிறந்ததோர் எதிர்காலத்தைப் பிறக்கப் போகும் எதிர்காலச் சந்ததியினருக்காக நாம் விட்டுச் செல்ல வேண்டும்.

இவ்வாறான ஒரு பின்புலத்தில், அதாவது பூகோள ரீதியான பெருந்தொற்றுக்கும் பூகோள ரீதியான பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில், மாற்றம் அடையக்கூடிய, மாற்றத்தை முகாமை செய்யக்கூடிய, தன்னைத் தாண்டிச் சிந்திக்க கூடிய பிள்ளைகளையும் மனிதர்களையும் உருவாக்க வேண்டுமாயின் அதற்கான தேர்ச்சியும் தேவையும் உள்ள பிரஜைகள், ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்வியியலாளர்கள்,

அரசியல்வாதிகள் முதலியோர் இந்நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். எனவே, இந்த யுகத்தின் சவால்களுக்கு தோள் கொடுக்கக்கூடிய விரிவான கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிப் பேசப்பட வேண்டிய சிறந்த தருணமாக இது இருக்கின்றது.

இந்தப் பின்னணியில் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது அல்லது பாடப் பரப்புகளை மாற்றி அமைப்பது போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட, வெறுமனே டொலர்களைச் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வெளிநாடுகளுக்கு அனுப்பத் தேவையான மனித வளத்தை மாத்திரம் இலக்காகக் கொள்ளாது, அதற்கு அப்பாலும் மனித விழுமியத் தொகுதிகளைத் தலைமேற்கொள்ளக்கூடிய ஆழமான கல்விச் சீர்திருத்தங்களை வரலாறு வேண்டி நிற்கிறது.

நானும் பதிப்பாசிரியர் குழு உறுப்பினராக இருக்கின்ற ‘கவேஷன’ என்ற சஞ்சிகையின் முப்பத்து ஒன்பதாவது இதழுக்கு அடிப்படையாக அமைந்த ‘நவீன உலகிற்குப் பொருத்தமான பயனுள்ள பிரஜையொன்றை உருவாக்குவதற்கு நாடு வேண்டி நிற்கும் கல்விச் சீர்திருத்தங்கள்’ என்ற நூறு பக்கங்கள் கொண்ட சிறப்பிதழுக்கு, ‘மாணவர் மையக் கல்வியும் இலங்கையின் பாரம்பரியக் கல்வி மரபுரிமையும்’ என்ற தொனிப்பொருளில் கட்டுரையொன்றை எழுதியுள்ள அதன் ஆசிரியர் குழு உறுப்பினரும் கொழும்பு மருத்துவ பீடத்தின் மருத்துவவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் கொமிந்த பொன்னம்பெரும அதனைப் பின்வருமாறு விளக்குகிறார்.

‘ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இன்று இலங்கையில் இருக்கும் கல்வி முறை, இலங்கையின் விசேட தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு ஏற்ற முறையில் மனித வளத்தை விருத்தி செய்கின்ற, பூகோள கல்விப் போக்குகளின் சாதகமான விடயங்களை உள்ளெடுத்துள்ள கல்வி முறையொன்றல்ல. இன்று இருப்பது மேற்கத்திய காலனித்துவ காலத்தில் பிரித்தானியர்கள் உருவாக்கிய கல்விமுறையே. அது இன்று மேற்கத்திய நாடுகளில்கூட அதே வடிவில் அமுலாக்கப்படுவதில்லை. அந்த நாடுகளில்கூட மாணவர்மையக் கல்விக்கு முதலிடம் வழங்கப் பட்டுள்ளது. எனவே

நாம் நம்புகின்ற மாணவ மையக் கல்வியானது மிக நெருக்கமாக இருப்பது முற்காலத்தில் எம்மிடமிருந்த எமக்கே உரிய கல்வி மரபுடனேயன்றி, பிரித்தானியரால் எம் மீது சுமத்தப்பட்டு இன்று அவர்களாலேயே நிராகரிக்கப்பட்டுள்ள, அதேவேளை எம்மால் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காலம் கடந்த பாடசாலைக் கல்வி முறையோடு அல்ல.'

நாம் நம்பிக்கை வைத்துள்ள மாணவர்மையக் கல்வி என்பது என்ன? இந்த எண்ணக்கருவிற்கு அடிப்படையாக அமைவது கற்றல் என்ற வார்த்தையின் வரைவிலக்கணமாகும். தற்கால வரைவிலக்கணங்களின்படி கற்றல் என்பது 'புரிந்துகொள்ளல், செய்து பார்த்தல், அனுபவங்கள் என்பவற்றினூடாகச் சேகரிக்கப்பட வேண்டிய திறன்களேயன்றி, ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு கடத்தப்படக்கூடிய மூலப் பொருளொன்று அல்ல.'

'கற்றல் என்பது ஆசிரியரிடமிருந்து மாணவரை நோக்கி இயக்கமின்றிப் பாயும் மூலப்பொருள் ஒன்றாயின், மாணவர் குழுவொன்றை வகுப்பறையில் அடைத்து வைத்து, நேரசூசியின்படி ஆசிரியரினால் மாணவருக்கு வழங்கப்படும் விரிவுரைகள், குறிப்புக்களுள் அந்தக் கற்றலைச் சுருக்கி விடலாம். எனினும், மேற்சொன்ன வரைவிலக்கணத்தின்படி அது அவ்வாறிருக்க முடியாது. அப்படியாயின் மாணவர்மையக் கல்வியும் இன்றைய வகுப்பறையும் எப்படி அமைய வேண்டும்? மேற்சொன்ன வரைவிலக்கணத்தின்படி உண்மையான கற்றல் என்பது ஒரு மாணவன் ஏனைய மாணவர்களுடனும் ஆசிரியருடனும் இணைந்து மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள், அதனோடு தொடர்புடைய மாணவர் செய்து பார்த்தல், தொழிற்பாடுகள், அனுபவங்கள் என்பவற்றினூடாக அந்த மாணவனில் உருவாகும் உள/விவேக, உடல் ரீதியான திறன்களிலும் மனப்பாங்குகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய செயன்முறையாக அமைய வேண்டும். இன்று எமது பாடசாலைகளில் உள்ள வகுப்பறை ஒன்றில் இது போன்ற ஆசிரியர்-மாணவர் கலந்துரையாடலும் செய்துபார்த்தலும் அனுபவம்

பெறுதலும் எந்த அளவுக்குச் சாத்தியமாகிறது?

அவ்வாறு சாத்தியமாக வேண்டுமானால் மாணவர்கள் சிறு குழுக்களாக வகுப்பறையினுள் செய்துபார்த்தல், அனுபவம் பெறுதல், கலந்துரையாடுதல் என்பவற்றில் ஈடுபட்டு, ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் தமது அறிவு ரீதியான, உடல் ரீதியான திறன்களையும் மனப் பங்குகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழலொன்று உருவாக வேண்டும். எனினும், இன்றைய வகுப்பறையானது ஆசிரியரிலிருந்து மாணவருக்கு தகவல் கடத்துவதைத் தவிர, ஆசிரியர் மாணவர் கலந்துரையாடலுக்கோ, அறிவு ரீதியான திறன்களின், மனப்பாங்குகளின், விருத்திக்கோ உகந்ததாக இல்லை. இந்த நிலைமையைத் தொடர்ந்தும் பேணுப்படுவதால் மனப்பாடம் செய்து ஆற்றலை ஊக்குவிக்கும், தர்க்கரீதியான அறிவை மழுங்கச் செய்யும் ஒரு கல்வி முறையே போசித்து வளர்க்கப்படுகிறது. நாட்டின் எதிர்காலத்திற்கு தேவையானது அறிவு ரீதியான திறன்களையும் மனப்பாங்குகளையும் கொண்ட தொழிற்சேனை ஒன்றெனின், இந்த வகுப்பறையின் அமைப்பு உடனடியாக மாற வேண்டும்.

'இந்தத் தர்க்கத்திற்கு எதிராகப் பேசுவோர் மாணவர் மையக் கல்வியினுள் ஆசிரியர் பலவீனம் அடைவதாகக் கூறுகின்றனர். அது முற்றிலும் தவறானதாகும். ஆசிரியர் மையக் கல்வியில் ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்புகள் மாணவரைச் சென்றடைகின்றன. மேலும், மாணவருக்கு விளங்காத ஏதும் பகுதிகள் இருப்பின் ஆசிரியர் அவற்றை விரிவாக விளக்கிக் கூறுவார். அதன்பின்னர், மாணவர்கள் ஆசிரியர் வழங்கிய குறிப்புகளை மனனம் செய்து பரீட்சையின்போது அவற்றைத் திருப்பி எழுதுகின்றனர்.

'எனினும் மாணவர் மையக் கல்வி முறையிலே ஆசிரியர் மாணவர்களோடு கலந்துரையாட வேண்டிய, செய்து பார்க்க வேண்டிய கற்றல் ஊக்கிகளை உருவாக்குகிறார். மாணவர்கள் கிரகித்து, கலந்துரையாடி, விளங்கிக் கொள்ளவேண்டிய எழுத்துமூல ஆவணங்கள், செயல்முறையான தோற்றப்பாடுகள் பற்றி விளக்குகின்ற

அறிக்கைகள், செய்து பார்க்க வேண்டிய தொழிற்பாடுகள் போன்றவை அவ்வாறான ஊக்கிகளாக அமையலாம். ஆசிரியர் உருவாக்கிய ஊக்கிகளை மாணவர்கள் சிறு குழுக்களாக இயங்கி செய்து பார்ப்பார்கள். அவ்வாறான செய்து பார்த்தல்களிலும் கலந்துரையாடல்களிலும் ஆசிரியர் நேரடியாகப் பங்குபற்றுவார். அப்போது மாணவர்கள் ஏதேனும் ஒரு விடயத்தைத் தவறாக விளங்கிக் கொண்டிருந்தால், அல்லது மாணவர்களால் விளங்கிக் கொள்ள இடர்படுவதாக ஏதும் இருந்தால் அவற்றுக்கு ஆசிரியர் விளக்கமளித்துத் திருத்தி விடுவார். அத்தோடு பாடத்திட்டத்தின் இலக்குகளையும் கற்றல் பெறுபேறுகளையும் மாணவர்கள் அடைந்திருக்கிறார்களா என்பதை ஆசிரியர் அவ்வப்போது மதிப்பீடு செய்து கொள்வார்.

மேலே தரப்பட்டுள்ள விளக்கத்தின்படி மாணவர் மையக் கல்வியில் ஆசிரியருடைய பங்களிப்பு பலவீனமடைவதற்கு பதிலாக மேலும் வலுவடைகிறது என்பது தெளிவாகிறது. இதனுடாக ஆக்கத்திறன் மிக்க, ஆர்வத்தை தூண்டி விடுகின்ற ஆசிரியர் பணிக்கு வழியமைக்கப்படுகிறது.

இன்று காணப்படும் கல்வி முறை மாணவர் மையக் கல்வியோ இலங்கையின் சம்பிரதாயக் கல்வி முறையோ அல்ல. இன்று இருப்பது மேற்கத்திய காலனித்துவ காலத்தில் பிரித்தானியர்கள் உருவாக்கிய கல்வி முறையாகும். இன்று மேற்கத்திய நாடுகளில்கூட காலனித்துவக் காலக் கல்வி முறை அதே வடிவில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அந்த நாடுகளில்கூட இப்போது மாணவர் மையக் கல்விக்கே முதல் இடம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஆசிரியர் மையக் கல்விக்கு முற்றிலும் வித்தியாசமான கல்வி முறையே புராதன இலங்கையில் காணப்பட்டது. அந்த முறையில் ஆசிரியர் மாணவரின் திறன்களை இனங்கண்டு கொண்டு, மாணவர் பின்பற்றக்கூடிய வாள் வீச்சு, வில்வித்தை, பயிர்ச் செய்கை போன்ற பல்வேறு கலைகளக் கற்பித்தனர். ஒவ்வொரு மாணவரினதும் கற்கும் ஆற்றல், பல்வேறு விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றுக்கு ஏற்ப கல்வி வழங்கப்பட்டதனால், அது சிறந்த மாணவர்

மையக் கல்வியாக அமைந்திருந்தது. எல்லா மாணவர்களினதும் தேவைகள் ஒன்றே எனவும், ஒரேவிதமான கற்றல் கற்பித்தல் முறை எல்லா மாணவர்களுக்கும் பொருந்தும் எனவும் கருதுகின்ற கல்வி முறையைவிட அது முற்றிலும் வித்தியாசமானது. கன்னங்கர அவர்களின் ஹந்தெஸ்ஸ கல்வி முறைக்கு இந்த எண்ணக் கருவே அடிப்படையாக அமைந்தது என்பது எனது புரிதலாகும்.

'எனவே, மேலே விவரிக்கப்பட்ட மாணவ மையக் கல்வி முறையானது எம்மிடமிருந்த கல்வி மரபுக்கே மிக நெருக்கமாக இருக்கிறது. மாறாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் எம்மீது சுமத்தப்பட்ட, இப்போது அவர்களாலேயே நிராகரிக்கப்படுகின்ற, என்றாலும் எம்மால் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைக் கல்வி முறையுடன் அது எந்த வகையிலும் தொடர்புபடவில்லை.'

'மேலே நாம் கட்டியெழுப்பிய தர்க்கத்தின்படி, மாற்றம் அடைய வேண்டிய, ஆனால் மாறாதிருக்கின்ற, ஓர் அறிவுத்துறையாக இந்நாட்டின் கல்வி இருக்கிறது என்பது வெளிப்படையான உண்மையாகும்.' இவ்வாறான நிலைமையின் கீழ் இதுவரை நிகழாத அந்தக் கல்விச் சீர்திருத்தங்களைச் செய்யும் பொறுப்பினை கடந்த வருடத்தில் கல்விச் சீர்திருத்த, தொலைக்கல்வி இராஜாங்க அமைச்சு திட்டமிட்டிருந்தது. அது தொடர்பாக கவேஷன சஞ்சிகைக்கு கட்டுரையொன்றை எழுதிய அந்த இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி உபாலி சேதர அவர்களால் முன்வைக்கப்பட்ட கல்விச்சீர்திருத்தங்கள் அதே விதத்தில் தற்போதைய கல்வி அமைச்சரின் கீழ் முன்னெடுக்கப்பட உள்ளன.

இந்தச் சீர்திருத்தங்களில் ஆறு அடிப்படை நோக்கங்கள் (விடயங்கள்) உள்ளன. அவையான :

(i) நாட்டின் அபிவிருத்திக்கு செயல் ரீதியாக பங்களிப்புச் செய்யக்கூடிய தனிநபரை உருவாக்குதல். (Active contribution to National Development)

(ii) உழைப்பு ரீதியான விளைதிறனும் வினைத் திறனும் கொண்ட தனிநபரை உருவாக்குதல். (Effective and efficient work oriented person)

(iii) முயற்சியாண்மைச் சிந்தனை கொண்ட தொழில்களை உருவாக்கக்கூடிய தனிநபரை உருவாக்குதல். (Person with entrepreneurship mind)

(iv) நாட்டுப்பற்றுள்ள தனிநபரை உருவாக்குதல். (Patriotic person)

(v) மானுடப் பண்புகள் நிரம்பிய தனிநபரை உருவாக்குதல். (Good human being)

(vi) புரிந்துணர்வு, மகிழ்ச்சி, ஒற்றுமை கொண்ட திருப்திகரமான குடும்பம் ஒன்றை உருவாக்குதல். (Happy family)

இந்த விடயங்களின் அடிப்படையில் கலைத்திட்டம் 4 பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(i) அறிவுசார் அடிப்படை (Scholarship)

(ii) உற்பத்தித் திறனுள்ள பிரஜையும் (productive citizen) அதற்கான செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வியும். (Activity based education)

(iii) குழுவாக வேலை செய்யும் ஆற்றல். அதாவது, ஓர் அணியாக வேலை செய்தல். (Team work)

(iv) மனவெழுச்சி விருத்தி (emotional development)

மொடியூல் முறையில் கல்வி நடவடிக்கைகளை மாணவர் மைய அடிப்படையில் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு கலைத்திட்டம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

(i) அத்தியாவசிய கற்றல் (essential learning)

(ii) சுய கற்றல் (self learning)

### (iii) மேலதிக கலைத்திட்டம் (extra curriculum)

இதன்படி பிற தொழிற்பாடுகளின் மூலம் தொழில் நாட்டமுடைய கல்வி ஒன்றுக்குப் பிள்ளைகளை திசைமுகப்படுத்துவது இதன் நோக்கமாக இருக்கிறது. இது பிரதானமாக 1-13 தரங்களுக்கு அல்லது பொதுக் கல்விக்கு ஏற்ற வகையில் செயல்படுத்தப்படும் என கலாநிதி உபாலி சேதர கூறியிருக்கிறார். எனினும் இதற்குச் சமாந்தரமாக 12-13 தரங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடத்திட்டங்களில் மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.

அதே சஞ்சிகையில் சிறப்புக் கட்டுரையொன்றை எழுதியுள்ள தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள், முன்வைக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படை பற்றி பின்வருமாறு விளக்குகிறார். 'எமது நாட்டில் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து செயற்பட்டு வந்த உன்னதமான கல்வி முறையொன்று இருந்துள்ளது. எனினும், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பிரித்தானியர்களின் பாடங்களை அடிப்படையாகக் கொண்ட கோட்பாட்டு ரீதியான விடயங்களால் நசுக்கப்பட்டு அந்த உன்னதமான கல்வி முறை சேதமுற்றது. 1948 ஆகும்போது எமக்கு எஞ்சியிருந்தது ஆங்கிலேயர்களால் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வியாகும். எனினும் 74 ஆண்டுகள் கழிந்த பின்னரும், எமக்கே உரிய கல்வி முறையொன்றை இந்த நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தவறியிருக்கிறோம். இதனால்தான் இன்றைய கல்விமுறையில் இருந்து வெளிப்படும் பிரஜைகளிடம் பல்வேறு பிரச்சினைகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான புதிய சந்ததியொன்று எமக்குத் தேவைப்படுகிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் தேசிய இலக்குகளை மனதிற்கொண்டு 2022 ஆம் ஆண்டில் புதிய கல்வி சீர்திருத்தங்கள் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆக்கத்திறன், புத்தாக்க சிந்தனை, தொழில்முயற்சிசார் மனப்பாங்கு என்பவற்றை உள்ளடக்கிய கல்வியொன்றை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கிறோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சீர்திருத்தங்களுக்குள் 21ஆம் நூற்றாண்டுக்குரிய, நவீன உலகிற்கு பொருத்தமான பயனுறுதிமிக்க பிரஜை பற்றிய கருத்துரு எப்படி அமைய வேண்டும்?

**21ம் நூற்றாண்டுக்கும் பல்வேறு துறைகளுக்கும் பொருத்தமான மனித மூலதனம்.**

21 CHC = 3R + 3L + SDL

21 CHC = 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான மனித மூலதனம்

| | |
|---|---|
| 3R = | Reading (வாசிப்பு) |
| | wRiting (எழுத்து) |
| | aRithmatic (எண் கணிதம்) |
| 3L = | Learning skills (கற்றல் திறன்கள்) |
| | Literacy skills (எழுத்தறிவுத் திறன்கள்) |
| | Life skills (வாழ்க்கைத் திறன்கள்) |
| 2C = | Character development (நடத்தை விருத்தி) |
| | Citizenship (குடியுரிமை) |
| SDL = | சுயமாகத் திசை முகப்படுத்தப்பட்ட கற்பவர்/ தொடர்ந்தும் தன்னை இற்றைப்படுத்திக் கொள்கின்ற ஒருவர். (Self-Directed Learner) |

உரு -1

'தற்போது நமது நாட்டில் உள்ள கல்விமுறையை அவர் 3R (Reading, wRiting, aRithmetic) கல்விமுறை என அழைக்கின்றார். புதிய முறையில் சிந்திப்பது, கேள்வி கேட்பது போன்றவை அதில் அடங்கா. 21ஆம் நூற்றாண்டின் 22 வருடங்கள் கடந்துள்ள இந்தப் பின்னணியில் பழைய முறையில் முன்னேற முடியாது என்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார். 'பழைய கைத்தொலைபேசி இப்போது பொருத்தமானதல்ல. இப்போது 'ஸ்மார்ட் போன் ' ஒன்று தேவைப்படுகிறது. இணையத் துக்குச் செல்லல், படம் பிடித்தல், வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவற்றை செய்வதற்கு இப்போது ஸ்மார்ட் போன்

(திறன் தொலைபேசி) தேவை. இன்றைய நிலைக்குப் பொருத்தமான முறையில் அந்த மாற்றத்தை செய்ய வேண்டுமானால் மேற்சொன்ன 3L களோடு மேலும் சில விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும். அதற்கென சமன்பாடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. (உரு -1)

மேற்சொன்ன 3R களுடன் 3D சேர்க்கப்பட வேண்டும். அதேபோன்று 2C யும் சேர்க்கப்பட வேண்டும். அது மட்டும் போதாது. SDL சேர்க்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் நிறைவேற்றுகின்ற ஒரு பிள்ளையே 21ம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான பிள்ளை என நாம் நம்புகிறோம்.

பொதுக் கல்வியை முடித்து விட்டு வெளியே வருகின்ற பிள்ளையிடம் இருக்க வேண்டிய பண்புகள் அல்லது நோக்கங்கள் என 6 விடயங்களை அவர்கள் இனங்கண்டுள்ளனர். (உரு -2)

**பொதுக் கல்வியின் தேசிய இலக்குகள்**

1) தேசிய அபிவிருத்திக்கு உயிர்ப்பாகப் பங்களிப்புச் செய்யும் ஒருவர். (An active contributor to National Development)

2) விளைதிறனும் வினைத் திறனுமுள்ள மற்றும் வினைத்திறன் உள்ள ஊழியர் ஒருவராக அல்லது கெட்டிக்கார சுய தொழிலாளராக இருத்தல். (And effective and efficient employee or smart self employee)

3) முயற்சியாண்மையாளராக அல்லது முயற்சியாண்மை மனப்போக்கு உள்ளவராக இருத்தல். (An entrepreneur or person with an entrepreneurial mindset)

4) நாட்டுப்பற்றுள்ள பிரஜையாக இருத்தல். (A patriotic citizen)

5) சிறந்த மனிதராக இருத்தல் (A good human)

6) மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற ஒரு குடும்ப அங்கத்தவராக இருத்தல். (A member of a Happy Family)

கல்வியை முடித்து வெளிவரும் பிள்ளையிடம் இருக்க வேண்டிய 6 பண்புகளையும் நாம் 9 கூறுகளாக பிரித்திருக்கிறோம். (உரு -3)

Positive - நேர்மறையானவர்
Practical - செயல்ரீதியானவர்
Proactive - முன்னின்று செயல்படுபவர்
Pragmatic - நடைமுறை ரீதியானவர்
Patriotic - நாட்டுப்பற்றுள்ளவர்
Passionate - ஆர்வ உணர்வு உள்ளவர்
Peace loving - சமாதானத்தை விரும்புபவர்
Preserving - பேணிக் காப்பவர்
Problem solver - பிரச்சினை தீர்ப்பவர்
(உரு - 3)

21 ஆம் நூற்றாண்டுக்குரிய பிள்ளையில் காணப்பட வேண்டிய திறன்களை புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இனங்கண்டுள்ளன. (உரு 4)

**21 ஆம் நூற்றாண்டுக்குரிய பிள்ளையில் இருக்க வேண்டிய 12 திறன்கள்**
**(The twelve 21st century skills)**

**கற்றல் திறன்கள் - Learning skills**

1) விமர்சன ரீதியான சிந்தனையும் பிரச்சினை தீர்த்தலும். (Critical thinking and problem solving)
2) ஆக்கத்திறன் - (Creativity)
3) ஒத்துழைப்பும் அணியாக வேலை செய்தலும் (Collaboration and teamwork)
4) தொடர்பாடல் பற்றிய அறிவு (Communication knowledge)

**எழுத்தறிவுத் திறன்கள் (Literacy skills)**

5) தகவல்சார் எழுத்தறிவு (Information literacy)
6) ஊடக எழுத்தறிவு (Media literacy)
7) தொழில்நுட்பவியல் எழுத்தறிவு (Technology literacy)


**வாழ்க்கைத் திறன்கள் (Life skills)**

8) நெகிழ்வுத் தன்மை (Flexibility)
9) தலைமைத்துவம் (Leadership)
10) தொடங்குமாற்றல் (Initiative)
11) உற்பத்தித்திறன் (Productivity)
12) சமூகத் திறன்கள் (Social skills)

(உரு -4)

அதனை அடுத்து சமூகத் திறன்களின் கீழ் நாம் ஆறு விடயங்கள் பற்றி பேசுகிறோம்.

- தன்னைத் தானே அறிந்து கொள்ளல்
- சுய முகாமை
- அடுத்தவர்களைப் புரிந்து கொள்ளல்
- அடுத்தவர்களுடன் நேர்வகையான முகாமை தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளல்
- சுற்றாடலுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளல்
- பொறுப்புணர்வுடன் தீர்மானங்களை மேற்கொள்ளல்



(உரு -5)

மேல்வாரியாக நோக்கும்போது, எண்ணக்கரு மட்டத்தில் மிகச் சிறப்பாகத் தோன்றும் இத்திட்டங்கள் தொடர்பாக ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. இவை கன்னாங்கர கோட்பாடுகளுடனும் பெரிதும் இணங்கிப் போகின்றன. எனினும், நாம் எதிர்கொண்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நாட்டில் மேற்சொன்ன

அனைத்தையும் சாத்தியமாக்கிக் கொள்வது எப்படி என்பதே பெரிய சவாலாக இருக்கின்றது.

ஒருபுறத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாரத்தில் ஐந்து நாட்களும் பாடசாலைகளை நடத்திச் செல்ல முடியாமல் இருக்கிறது. மறுபுறத்தில் நிகழ்நிலைக் கல்வி முறைகளின் ஊடாக கற்பிப்பதில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப ரீதியான ஏற்றத்தாழ்வுகள், குறைபாடுகள் என்பன இந்தச் சீர்திருத்தங்களின் மீது எப்படியான பாதிப்பை ஏற்படுத்துமோ தெரியாது. அத்தோடு இந்தச் சீர்திருத்தங்களைத் தொழிற்சங்கத் தலைவர்களும் மாணவர் இயக்கங்களும் அரசியல் சாயம் பூசப்பட்ட கண்ணாடிகளின் ஊடாக நோக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகிறது.

அத்தோடு, இந்தச் சீர்திருத்தங்களை சமூகத்திற்கு முன்வைக்கும் போது, இவற்றோடு கட்டாயமாக இணைந்து கொள்ள வேண்டிய பங்குதாரர்களின் கிரகித்தலும் புரிந்துணர்வும் நிச்சயமாக வித்தியாசப்படப் போகின்றன. ஏனெனில், பல்வேறு சமூக மட்டங்களுக்கு இந்தச் செய்தியை எடுத்துச் சொல்வதும் ஒவ்வொரு சமூக மட்டத்தினாலும் புரிந்து கொள்ளப்படக்கூடிய முறையில் தகவலை வழங்குவதும் பாரிய சவால்களாகவே இருக்கின்றன. அதற்காக இந்தச் சீர்திருத்தங்களுக்கு சமாந்தரமான விதத்தில் அத்தகவல்களை வழங்குவதற்கு இலத்திரனியல் , அச்சு ஊடகங்களையும் செல்வாக்கு செலுத்தக்கூடிய சமூக மட்டங்களையும் பயன்படுத்துவதில் பாரதூரமான ஒரு குறைபாடு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது பற்றி எச்சரிக்கை விடுக்கும் சமூகப் பொறுப்பு எனக்கும் இருக்கிறது.

மாற்றங்களுக்கு எதிர்ப்புக் காட்டுவது மனிதவர்க்கத்தின் இயல்பாகும். இவ்வாறான நிலைமையில், நடைமுறையிலுள்ள கல்வி முறை ஏன் மாற்றியமைக்கப்பட வேண்டும்? அது எவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்? அதனுடைய இறுதி இலக்கும் திசையும் எவ்வாறு தீர்மானிக்கப்பட வேண்டும்? போன்ற விடயங்களைப் பற்றிச் சிறந்த முறையில் தொடர்பாடல் நடாத்தப்பட வேண்டும். பொது

மக்களின் அச்சங்கள், சந்தேகங்கள், அவநம்பிக்கைகள், கவலைகள் முதலியவற்றைத்தனிக்கும் வகையில் அது நிறைவேற்றப்படாமல் போகுமானால், சேதனப் பசளை விவசாயத்துக்கு நிகழ்ந்த கதியே இதற்கும் ஏற்படுமென நான் எதிர்வு கூறுவது குறித்து எவரும் என்னுடன் கோபித்துக் கொள்ளக் கூடாது.

மேலும், சீர்திருத்தங்கள் எவ்வளவு நல்லவையாக இருந்த போதிலும், குறிப்பாக ஐந்தாம் தர புலமைப் பரிசில் போன்ற உணர்வுகளைத் தூண்டி விடக் கூடிய விடயங்கள் உள்ளடங்கும்போது, தனியார் வகுப்புகளை நடத்துவதை தம் தொழிலாகக் கொண்ட சமூக மட்டத்தைச் சேர்ந்த பிரத்தியேக ஆசிரியர்களே இச் சீர்திருத்தங்களுக்குச் சவால் விடுபவர்களாக இருப்பார்கள்.

ஒருபுறத்தில் அனைத்து முறைமைகளும் மாற்றப்பட வேண்டும் என்ற ரீதியில் system change வேண்டுமெனத் தெரிவிக்கும் பல்வேறு சமூக மட்டத்தினர்கூட, அந்த மாற்றங்கள் தம்மைப் பாதிக்குமாயின் வேறு விதமாகவே சிந்திக்கத் தலைப்படுவார்கள். ஒரு பிரச்சினை தமக்கு வரும் போது ஒருவர் சிந்திக்கும் விதமும், அதே பிரச்சினை இன்னொருவருக்கு வரும்போது அவர் சிந்திக்கும் விதமும் எப்படி வேறுபடுகின்றன என்பதைப் பற்றி உளவியல் ரீதியில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சீர்திருத்தங்களுக்கு சம்மாந்தரமாக ஆசிரியர்களின் மனப்பாங்குகளை எப்படி மாற்றி அமைப்பது என்பது இன்னொரு முக்கிய சவாலாகும். பெரும்பாலான ஆசிரியர்கள் சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பது இதன் கருத்தல்ல. எனினும், அது பற்றி உறுதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்குத் தேவையான ஆய்வுத் தரவுகள் எம்மிடம் உள்ளனவா என்பது பற்றி என்னால் நிச்சயித்துக் கூற முடியாது.

இந்த நிலைமையில் இவ்வாறான மாற்றங்களுக்கு முகம் கொடுக்க நேரும்போது சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களை அவற்றின் ஆதரவாளர்களாகவும் கௌரவ பங்காளர்களாகவும்

ஆக்கிக் கொள்வதற்கான பாரிய தொடர்பாடல் ரீதியான சவாலையும், உபாயரீதியான பிரவேசத்தையும் கையாளும் பொறுப்பு அதிகாரிகள், அரசியல்வாதிகள், அறிஞர்கள் வசமே இருக்கின்றது என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது. கல்விச் சீர்திருத்தம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தில், சீர்திருத்தச் செயல்முறையின் முக்கிய அம்சமாக இந்த உபாயரீதியான தொடர்பாடல் இடம்பெற வேண்டி யுள்ளது.

பாடசாலைத் தொகுதியின் தரம் 1-13 தொடர்பாக நடைபெறும் சீர்த்திருத்தங்களுக்கு மேலதிகமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய இவ்விடயத்தின் அடுத்த அம்சங்கள் யாவை?

(i) முன் பிள்ளைப் பருவ விருத்தியும் முதல் 1000 நாட்களும்.

(ii) ஒட்டுமொத்தக் கல்வியின் கூறு என்ற வகையில் பாலர் பாடசாலைகளின் வகிபாகம்.

(iii) உட்படுத்தற் கல்வியும் விசேட தேவையுள்ள பிள்ளைகளும்

(iv) கல்விச் சீர்திருத்தத்தில் தொலைக் கல்வியின் பங்களிப்பும் சவால்களும்

(v) கல்விக்கும் சுகாதாரத்துக்கும் இடையேயான தொடர்பு

(vi) தனியார் கல்வி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும்

(vii) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் பிள்ளைகள்

(viii) வாழ்நாள் முழுவதுமான கல்வியில் வளர்ந்தோர் கல்வி. தொழில்வாண்மை பெற்றவர்களின் தொடர்ச்சியான வாண்மை விருத்தி

(ix) ஒட்டுமொத்த கல்வியின் கூறு என்ற வகையில் ஆய்வுகளின் பங்களிப்பு

மேற்சொல்லபட்ட விடயங்கள் பற்றி ஆழமாகக் குறிப்பிடுவதற்கு காலம் போதாத காரணத்தினால் இவற்றில் மிக முக்கியமானவை என நான் கருதும் சில விடயங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

### (i) முன் பிள்ளைப் பருவ விருத்தியும் முதல் 1000 நாட்களும்.

ஒரு பிள்ளைக்காக ஏதேனும் முதலீடொன்றைச் செய்வதாயின், ஆகக்கூடிய கவனத்தையும் முயற்சியையும் செய்ய வேண்டிய காலம் முதல் 1000 நாட்களாகும். இதற்கு காரணம் ஒரு பிள்ளையின் மூளை விருத்தியில் நூற்றுக்கு 80 சதவீதம் முதல் மூன்று வருடங்களில் நிறைவு பெறுவதே. எனவே, கல்விச் சீர்திருத்தத்தில் சிறப்பான முதலீடு முன் பிள்ளைப் பருவத்தில், அதாவது பொன்னான முதல் ஆயிரம் நாட்களில், செய்யப்பட வேண்டும். ஏனெனில், பிள்ளையின் அறிவு விருத்திக்கு உடல் ரீதியான வளர்ச்சிக்கும் இக்காலம் முக்கியமாக இருக்கிறது. இந்தக் காலத்தினுள் இடப்படும் அடித்தளம் உறுதியானதாக இருப்பின் பிள்ளைகள் தமது கல்வியை வெற்றிகரமாகப் பெற்றுக் கொள்ள முடியும். சுகாதாரம் தொடர்பாக நோக்கும்போது இந்த விடயத்தில் சுகாதாரத் திணைக்களம், குறிப்பாக அதன் குடும்ப சுகாதாரப் பிரிவு, மிக உயர்மட்ட பங்களிப்பை வழங்குகிறது. எனினும் இந்தச் செயல்முறையில் பெற்றோர்களையும் கௌரவ பங்காளர்களாக ஆக்கிக் கொள்வதில் குறைபாடு காணப்படுகிறது. Responsive care giving என அழைக்கப்படும் எதிர்வினை காட்டும் பராமரிப்பு என்பது, பிள்ளைகள் காட்டும் சமிக்ஞைகளை உரிய காலத்திலும் உரிய முறையிலும் அவதானிப்பதும், அந்தச் சமயங்களை புரிந்து கொண்டு அவற்றுக்கு எதிர்வினை காட்டுவதும் ஆகும்.

முன் பிள்ளைப் பருவத்தில் பிள்ளையொன்றைப் பராமரிப்பது, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, பரிந்துரைகளுக்கு ஏற்பச் செய்யப்பட முடியாது. இது பற்றிய விஞ்ஞான ரீதியான எண்ணக்கருக்களை பெற்றோர்கள் புரிந்து கொள்வதோடு தமது அன்றாடப் பழக்கவழக்கங்களில் அவற்றை உள்ளடக்கிக் கொள்ளவும் வேண்டும். பிள்ளைகளைப் பராமரிக்கும் விதம் பெற்றாருக்கு பெற்றார் வேறுபடுகிறது. எனவே, தற்போது தாம் தமது பிள்ளைகளுடன் நடத்துகின்ற இடைச் தொழிற்பாடுகளைப் பற்றிச் சிந்தித்து அதன் பிறகு தமது போக்குக்கு ஏற்ப பிள்ளைகள் தொடர்பான தமது பராமரிப்பு முறைகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

எனினும், இந்தத் தேர்ச்சியை ஒழுங்கான விதத்தில் பெற்றோருக்கு வழங்கக் கூடிய நிலையானதும் போதுமானதுமான முறைமையொன்று கல்விமுறையிலோ சுகாதாரக் கட்டமைப்பிலோ காணப்படுவதில்லை.

இது பற்றி விரிவாகக் குறிப்பிட எதிர்பார்க்காத போதிலும் இந்த எண்ணக்கருவின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தவே நான் விரும்புகிறேன். ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில், சாதாரண தரம், உயர்தரம் என்பவற்றை விட முதல் மூன்று வருடங்கள் தொடர்பாகவே அதிக முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

மூளையின் விருத்தியை ஊக்குவிப்பது உயர் பெறுபேறுகளைத் தரக்கூடிய முதலீடாகும். முதல் 1000 நாட்களில் பிள்ளையின் மூளை விருத்தியை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உண்மையிலேயே இலங்கையருக்காகச் செய்யக்கூடிய உயர்தரமான முதலீடாகும். பிள்ளையின் மூளை விருத்திக்காக செலவிடப்படும் ஒவ்வொரு 200 ரூபாவுக்கும் 1800 ரூபா பெறுமதியான பெறுபேற்றைப் பெறலாம் என ஆய்வுகள் சான்று பகர்கின்றன.

**(ii) ஒட்டுமொத்த கல்வியின் கூறு என்ற வகையில் பாலர் பாடசாலைகளின் வகிபாகம்.**

கல்விச் சீர்திருத்தங்களுக்கு மத்தியில் பாலர் பாடசாலைகளின் வகிபாகம் தொடர்பாக எமது நிலைப்பாட்டை விளக்கி, கவேஷன சஞ்சிகையின் 39ஆவது இதழில் தேசிய கல்விக் கல்லூரியின் ஓய்வு பெற்ற உப பீடாதிபதி என். எம். மாலா ஆர். த சில்வா எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்.

அதன்படி, ‘பரந்த சமூகத்தினுள் நபர் ஒருவரைப் பிரவேசிக்க செய்யும் மங்கல நுழைவாயிலாக பாலர் பாடசாலைகள் இனம் காணப்பட்டுள்ளன. மேலும் கொஸ்வத்தே அரியவிமல தேரர் கூறுவதை (பௌத்த பாலர் கல்வித் தத்துவங்கள் -1990, பக்கம் 53) மேற்கோள் காட்டும் அவர், ‘பாலர் பாடசாலையொன்று செய்யவேண்டியது பிள்ளையை நவீன விளையாட்டுப் பொருட்களுக்கு மத்தியில்

அமர்த்துவது அன்று. ஆங்கிலக் கவிதை ஒன்றை ஒப்புவிப்பதற்கு பழக்குவதுமன்று. அவை யாவும் மேலதிகமான அம்சங்களாகும். பாலர் பாடசாலை என்பது டியூட்டரி என்னும் தனியார் வகுப்பொன்றல்ல. அது சிறு பிள்ளைகள் விளையாடும் இடமாகும். சமூகத் தொடர்புகளை இனங்கண்டு கொள்ளும் இடமாகும். அதுவே மானிடக் கல்வியாகும். பரந்த சமூகத்தினுள் நபர் ஒருவரைப் பிரவேசிக்க செய்யும் மங்கல நுழைவாயிலே அது' என்கின்றார்.

மேலும், 'முன் பாடசாலை மாணவர்களின் கல்வியானது, எந்தவிதமான கல்வி, மற்றும் கலாசார கோட்பாட்டுக்கும் அவசியமாகின்ற முன் தேவையொன்றாகும்' என 'வாழ்வதற்காகக் கற்றல்' என்னும் யுனெஸ்கோ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது, அதன் முக்கியத்துவத்தை நன்கு தெளிவாக்குகிறது. '1990 செப்டம்பர் 26ஆம் திகதி நியூயோர்க் நகரில் கூடிய அரச தலைவர்கள் விடுத்த 'பிள்ளைகளின் இருப்பை உறுதிப்படுத்தலும் கல்வி விருத்தியும்' தொடர்பான பிரகடனத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையான பரிந்துரையாக 'முன் பிள்ளைப் பருவம் இரம்யமானதாகவும், விளையாட்டுக்களுடன் கூடியதாகவும், சந்தோசமும் கற்றலும் நிரம்பியதாகவும் அமைவதற்கு வழி வகுக்க வேண்டும்' என்பது அமைந்திருந்தது.

1977ஆம் ஆண்டு இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முன் பிள்ளைப் பருவக் கல்வி பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. 3 - 5 வயது பிள்ளைகளுக்காக சிறந்த கல்வியை வழங்குவதற்காக பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் முன் பிள்ளைப் பருவ விருத்தி நிலையங்கள் தொடர்பான தேசிய கணக்கெடுப்பின்படி 19,668 பாலர் பாடசாலைகள் உள்ளன. எனினும், இலங்கையில் பாலர் பாடசாலைகளில் பெரும்பாலானவை தனியார் உடைமைகளாக முகாமை செய்யப்படுவதனால் பெரும்பாலான பெற்றோருக்கு அந்தச் செலவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இப் பாலர்பாடசாலைகள் கண்காணிக்கப்படுவதுமில்லை,

அவற்றுக்கான தர நிர்ணயம் காணப்படுவதுமில்லை.

இவ்வாறான நிலைமையில், எதிர்காலம் வேண்டி நிற்கும் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் இந்தப் பாலர் பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கும் அவற்றில் சேவை வழங்குவோரை உரிய முறையில் பயிற்றுவிப்பதற்கும் பரந்த அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

### (iii) கல்விசார் உட்படுத்தலும் விசேட தேவையுள்ள பிள்ளைகளும்

இந்த விடயம் தொடர்பாகவும் கவேஷன சஞ்சிகையின் 39 ஆவது இதழில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செல்வி பினோலி ஹேரத் அவர்கள் எமது நிலைப்பாட்டின் அடிப்படையில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

'உலகில் வாழும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் சம உரிமை உண்டு. எனினும், விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பது யாவரும் அறிந்ததே.'

'உடல் ஊனம், வறுமை, ஒதுக்கப்படுதல் என்பன காரணமாக அவர்கள் சமூகத்தில் கவனிக்கப்படாது போகின்றனர். அத்தோடு அவர்களில் பலர் தமக்குள்ள வாய்ப்புகள் பற்றி அறியாதிருக்கின்றனர். அதேபோன்று இவ்வாறான பிள்ளைகளிடம் இருக்கக்கூடிய ஆற்றல்கள் பற்றியும் பலருக்கு ஆழமான விளக்கம் இல்லை.'

களனி பல்கலைக்கழகத்தோடு இணைந்து அமைக்கப்பட்டுள்ள "அயதி" (Ayati) மைய நிலையம், விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு, அவர்கள் தமது உச்ச ஆற்றல்களை அடைவதற்குத் தேவையான நவீன விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகளுடன் மற்றும் நிபுணத்துவ அறிவினூடாக, சுகாதார மற்றும் கல்விச் சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும்.

இந்நிறுவனம் வளவாளர்களைப் பயிற்றுவிக்கும் இடமாகவும் செயற்படுவதோடு, அது தொடர்பான ஆய்வுகளுக்குரிய மத்திய நிலையமாகவும் செயற்படுகிறது. இவ்வாறான நிறுவனங்கள் நாட்டினுள் விரிவாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்காக இருக்கும் மாற்றுக் கல்வி வாய்ப்புகள் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம் என நம்புகிறேன்.

1. விசேட பாடசாலைகள் (Specialised schools): விசேட தேவையுள்ளோர் கல்விக்கான பாடசாலைகள் என்பவை ஒப்பிட்டளவில் கடுமையான ஊனங்களைக் கொண்ட பிள்ளைகளுக்குரிய பாடசாலைகளாகும். அவை பாலர், ஆரம்ப, கீழ் இடைநிலை, மேல் இடைநிலை என நான்கு மட்டங்களைக் கொண்டவை. கட்புலக் குறைபாடு, செவிப்புலக் குறைபாடு, உடல் அல்லது உளக்குறைபாடு முதலிய குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு இந்த விசேட பாடசாலைகள் கல்வியை வழங்குவதோடு, இவற்றில் பிள்ளைகளுக்கு விசேட கலைத்திட்டங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் மேற்கொள்ளப்படுகிறது.

2. சாதாரண பாடசாலைகளில் உள்ள விசேட கல்வி அலகுகள் (Special education units within mainstream schools) அமைக்கப்பட்டுள்ளன. சாதாரண பாடசாலைகளிலேயே அமைக்கப்பட்டுள்ள, விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான விசேட கல்வி அலகுகளில் கல்வியைப் பெற்றுக் கொடுக்கலாம்.

3. சாதாரண பாடசாலைகளோடு இணைக்கப்பட்டுள்ள சிறப்பு வள மையங்கள். (Special resource centres attached to mainstream schools). இங்கு, குறைபாடுள்ள பிள்ளைகள் சாதாரண வகுப்புகளில் சேர்ந்து கூடுதலான நேரம் கல்வியைப் பெறுகின்றனர். அதேவேளை, விசேட சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வாரத்தில் பல தடவைகள் சிறப்பு வள மையத்திற்கு அவர்கள் விஜயம் செய்யலாம். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம்

பேச்சுக் கோளாறு , ஆட்டிஸம், மனவெழுச்சிக் கோளாறு, கேள்விக் கோளாறு, பார்வைக் கோளாறு, கற்றல் கோளாறுகள், கவனக் குறைபாட்டு, மிகைச் செயற்பாட்டுக் கோளாறு (ADHD) முதலிய கோளாறுகளைக் கொண்ட பிள்ளைகளுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

4. சாதாரண பாடசாலைக் கல்வியில் காணப்படும் உட்படுத்தற் கல்வி (Inclusive mainstream schools). சிறப்புத் தேவை உள்ளோருக்கான கல்வி சாதாரண பாட சாலைகளிலும் வழங்கப்படுகின்றது. மிதமான கோளாறுகளைக் கொண்ட பிள்ளைகள் சாதாரண பாடசாலைகளில் சேர்ந்து கற்றலை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு நுட்ப ரீதியில் வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள் மூலம் ஓரளவான சாதனை மட்டம் எமது கல்வி முறையில் எட்டப்பட்டுள்ள போதிலும், இவ்வாறானவர்களை வித்தியாசமாக நோக்காத, முழுச் சமூகத்தையும் விசேட தேவையுள்ளோருக்கு நட்புறவு காட்டும் சமூகமொன்றாக உயர்த்துவதற்குரிய மனப்பாங்கு ரீதியான ஒரு மாற்றம் தேவை. இதற்கு அவசியமான அடித்தளத்தை நமது கல்வியில் உறுதிப்படுத்துவதற்குரிய விடயங்கள் எமது கல்வி சீர்திருத்தத்தில் உள்ளடங்க வேண்டும். மேலும் விசேட தேவை உடையோருக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், அவற்றுக்கு சம்மாந்தரமான பொதுக் கல்வித் துறையில் பின்பற்றப்படும் கலைத்திட்டத்தைப் பின்பற்றிய போதிலும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், உபகரணங்கள், இட வசதி முதலியவற்றை கருத்தில் கொண்டு கற்பித்தல் முறைகளை நவீன மயப்படுத்துவது மிக அவசியம்.

## (iv) கல்வி சீர்திருத்தத்திற்கு தொலைக்கல்வியின் பங்களிப்பும் சவால்களும்.

இது தொடர்பாக நாம், கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகம், தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீ. எம். நீல் குணதாஸ அவர்களுடன் கலந்துரையாடினோம். அவர் தந்த விளக்கத்தின் படி இதுவரை காலமும் தொலைக்கல்வியின் பல்வேறு பிரிவுகள் பொதுக் கல்வியின் கீழ் சிறிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள. எனினும், தொலைக்கல்வியை பொதுக் கல்வியின் சமயாசமய விடயமாக மாற்றிக் கொண்டு, அதற்காக தொலைக்கல்வி அலகொன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, தகவல் தொழினுட்ப உலகின் முன்னேற்றத்தோடு கணினி, வயடி, இணையம், ஸ்மார்ட் போன், நவீன தொழில்நுட்ப சாதனங்கள் முதலியன வாழ்க்கைக்குத் தேவையானவையாக மாறி இருப்பதனால் அவற்றினூடாகத் தொலைக்கல்விக்கு மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு COVID - 19 பெருந்தொற்றின் பின்புலமும் தொலைக்கல்வியை மேலும் விருத்தி செய்வதன் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

2013 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் “e-தக்சலா“ என்ற நிகழ்நிலை முகாமைத்துவக் கற்றல் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்கு தேவையான கற்றல் ஊடகங்கள் ஓரளவுக்கு அதில் அடங்கி இருந்தன. புதிய கல்விச் சீர்திருத்தங்களில் பயன்படுத்தப்படக்கூடிய விதத்தில் அவர்கள் அதனை மேலும் விருத்தி செய்துள்ளனர். அது மெய்நிகர் (virtual) வகுப்பறை போன்ற ஒன்றாகும். வகுப்பறையில் நிகழும் பௌதிக செயல்முறை மெய்நிகர் முறையில் வகுப்பறைக்கு வெளியே இடம்பெறுகின்றது. Zoom, Microsoft Team போன்ற நவீன தொழில்நுட்ப அணுகுமுறைகளும் அவற்றில் உள்ளடங்கியிருந்தன.

இலங்கையில் உள்ள 10,165 பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் அப்பாடசாலையின் பெயரில் இடம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஒரு மூலையில் உள்ள பிள்ளையொன்றுக்கு இன்னொரு மூலையில் உள்ள ஆசிரியர் ஒருவர் விரிவுரையொன்றை உடன் திட்டமிட்டு நிகழ்த்தச் செய்வதற்கு இதன் மூலம் வழி கிடைக்கிறது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களை மொடியூல் முறையின் கீழ் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதால், அதற்கு ஏற்ற வகையில் “e-தக்சலா“ வின் அடக்கத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பத்து மணித்தியாலங்களுக்குரிய மொடியூல் ஒன்றினை எடுத்துக் கொண்டால், அதனை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு Credit ஒன்று கிடைக்கும். மொடியூல் ஒன்றுக்குரிய உள்ளடக்கம் பிள்ளைக்கு பாடசாலையினால் வழங்கப்பட்டாலும், அதற்கு அப்பாலும் மொடியூல் தொடர்பான விடயங்களைக் கொண்டு பிள்ளையின் மனப்புலத்தை விரிவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக, இதன் உள்ளடக்கத்தை உருவாக்கும் போது மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படும். ஆசிரியர்களுக்கு மேலதிகமாக குறித்த துறைசார் நிபுணர்களிடம் அதற்கான அறிவு பெற்றுக் கொள்ளப்படும். விவசாயத்தைப் பற்றிப் பேசுவதானால் அது தொடர்பான அறிஞர்களின் அறிவுப் பங்களிப்பு அதற்காகப் பெற்றுக்கொள்ளப்படும். பாட விடயத்திற்கு மேலதிகமாக, அதனோடு தொடர்புடைய பல்வேறு விடயங்கள் பற்றிய அறிவை தொலைக்கல்வியையும் இணையத்தையும் பயன்படுத்தி மாணவருக்கு பெற்றுக் கொடுப்பதற்குரிய பின்புலம் அமைக்கப்பட்டு வருகிறது.


நாட்டின் எல்லாக் கல்விக் கோட்டங்களும் உள்ளடங்கிய வகையில் 107 கணினி மையங்களை இப்புதிய சீர்திருத்தங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் பிரதேச வளமைய நிலையங்களாக விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வருடத்தில் 215 பாடசாலைகளில் கல்விச் சீர்திருத்த முன்னோடிச் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பயிற்சி வழுங்கப்படுவதும் சுய கற்றலின் மூலமேயாகும். அதற்காக தொலைக்கல்வி மையத்தின் ஊடாக பாரிய பங்களிப்பு எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டியுள்ளது. நமது இந்தத் தொடர்பாடல் செயல்தொடர் 'ந-தக்சலா', யூடியூப் வழி மற்றும் 'நெனச' உட்பட்ட டயலொக் தொலைக்காட்சியின் 8 வழிகளின் ஊடாக ஏற்படுத்தப்படுகின்றது.

பிரதிகூலங்களைக் குறைப்பதற்காக தொலைக்கற்றல் மூலம் கல்வியை வழங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பாராட்டப்படக்கூடியனவாக இருப்பினும், நாட்டின் பல பகுதிகளில் டிஜிட்டல் வசதிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக கல்வி வழங்குவதில் சமானத்தன்மையைப் பேணி நியாயமான முறையில் செய்ய முற்படும் போது பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.


கல்வி என்பது ஒரு வரப்பிரசாதமல்ல. அது ஓர் உரிமை என்பதை ஏற்றுக் கொள்ளும் நாம், குறைந்த வசதிகளும் வரப்பிரசாதங்களும் உள்ள, ஆபத்தில் மாட்டிக் கொள்ளக்கூடிய பிள்ளைகள் மீது கோவிட்-19 காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை விசேடமாகக் கவனிக்க வேண்டுமென நம்புகிறோம். கோவிட் -19 காரணமாக மாத்திரமன்றி எரிபொருள் நெருக்கடி காரணமாகவும் சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் தீவிரம் அடைந்துள்ளன. கிராமப்புறத்திலும் வசதி குறைந்த பகுதிகளிலும் வாழ்கின்ற பிள்ளைகளைப் போன்ற வரப்பிரசாதங்கள் குறைந்த சனசமூகத்திற்கும் ஊனமுற்ற பிள்ளைகள் போன்ற ஆபத்துக்குரிய கூட்டத்தினருக்கும் கூடிய கவனிப்பும் முக்கியத்துவமும் இந்த சமூக முயற்சிகளில் வழங்கப்பட வேண்டும். இந்தப் பின்னணியில் பெருந்தொற்று காரணமாகவோ, வேறு காரணத்துக் காகவோ இவ்வாறு ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும் காலகட்டத்தில், சமத்துவத்துக்கு (equality) அப்பால் உரிமையை (equity) நிலைநாட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். எனினும் உண்மைநிலை இதற்கு முற்றிலும் வித்தியாசமாக இருப்பதோடு, உருவாகியிருக்கும் பொருளாதார,

அரசியல், சமூக நெருக்கடிகளுக்கு மத்தியில், கன்னங்கர யுகத்துக்கு முன்னர் இருந்தது போன்று வரப்பிரசாதம் கொண்ட சமூக மட்டங்களுக்கு கூடுதலான அனுகூலங்கள் கிடைக்கும் நிலை உருவாகி வருகிறது என எச்சரிக்க வேண்டியிருக்கிறது.




## (v) கல்விக்கும் சுகாதாரத்திற்கும் இடையிலான தொடர்பு

கல்விக்கும் சுகாதாரத்திற்கும் இடையில் உள்ள பிரிக்க முடியாத தொடர்பு வேறு எப்போதையும் விட கொரோனா பிரச்சனையின் போது மிக முனைப்பாகத் தெரிந்தது. சுகாதாரம் என்பது உடல ஆரோக்கியம், உள ஆரோக்கியம் இரண்டையுமே குறித்து நிற்கிறது. இது பற்றி இந்த உரையில் நீண்ட நேரம் விளக்கமளிக்க எதிர்பார்க்கவில்லை. எனினும், சுகாதாரத்துறையும் கல்வித்துறையும் இப்போது உள்ளதை விடக் கூடுதலாக இணைந்து செயல்பட வேண்டும் என்பதைக் கூற விரும்புகிறேன். அது கன்னங்கர சிந்தனைக்கு பெரிதும் நெருக்கமான ஓர் எண்ணக்கரு என்பதையும் வலியுறுத்துகிறேன்.




## (ix) கல்விவாண்மையாளர்களின் தொடர்ச்சியான வாண்மை விருத்தி

எந்தவொரு தொழிலினதும் கண்ணியத்திற்கும் நியமத்திற்கும் நிரோதமான பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் சிறுதொகையின-ரே. கல்வி வாண்மையாளர்களைப் பொறுத்தமட்டில்கூட இது உண்மையாகும். எனினும் இதில் காணப்படும் பாரதூரமான விடயம் அந்தச், சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அடிபணியச் செய்து தமது வழியில் செலுத்துவதற்காக இருக்கும் நிகழ்தகவாகும். சமாதானத்தை விரும்புகின்ற, சச்சரவுகளையும், நிந்தனை மற்றும் அவமானங்களையும் விரும்பாத பெரும்பான்மையினரின் கருத்துக்கள் நசுக்கப்படுவதனால் ஏற்படும் தீங்குகள் சொற்பமானவை அல்ல. இந்த நிலையில், இந்தத் நிரோதமான போக்கைத் தோற்கடிக்க வேண்டுமாயின் அவர்களை வலுப்படுத்த வேண்டும். இது இரண்டு முறைகளில் செய்யப்பட வேண்டும். ஒன்று தொழில்வாண்மை ரீதியாக வலுப்படுத்தல்; இரண்டாவது தனியாள் ஆளுமையை வலுப்படுத்தல்.

1977-ற்குப் பின் சமூகத்தில் ஏற்பட்ட அறநெறி ரீதியான சீரழிவு, சுயலாப மனப்பாங்கு, பண்புத்தொகுதிகளின் சரிவு என்பவற்றிலிருந்து இலங்கையின் ஆசிரிய சமூகம் முற்றாகத் தப்பித்துக் கொள்ள முடியாது போனாலும், பரோபகார சிந்தனையுள்ள, மக்கள் சேவையை உன்னதமாகக் கருதுகின்ற பெரும்பான்மை ஆசிரியர் சமூகமொன்று இப்பொழுதும் இலங்கையில் இருக்கிறது என்பது எனது தனிப்பட்ட அனுபவமாகும்.

சகல விதமான தொழில் வாண்மை உள்ளவர்களையும் இளைஞர்களையும் சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களே. அப்படியாயின் அவர்களுடைய தொழில் பற்றிய மதிப்பும் சமூக அங்கீகாரமும் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு உள்ளதை விட மேன்மையாக இல்லாவிடிலும் அந்த மட்டத்திலாவது இருக்க வேண்டும். அதற்காக கல்வி வாண்மையாளர்களின் தொடர்ச்சியான வாண்மை விருத்திக்குரிய முறையானதும் விரிவானதுமான செயல்திட்டமொன்று கல்விச் சீர்திருத்தங்களோடு இணைந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை கல்வி வாண்மையாளர்களின் அபிவிருத்தி தொடர்பாக, நாம் முன் சொன்ன கவேஷன சிறப்பிதழுக்கு, அம்பாறை ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் திருமதி எச். எம். ஆர். கோகிலா நந்தினி பிரியந்தி அவர்கள் எழுதியுள்ள கட்டுரை நல்லதொரு விளக்கத்தைத் தருகிறது.

'கல்வி வாண்மையாளர்களின் தொடர்ச்சியான தொழில் வாண்மை விருத்தியானது கல்வித் திணைக்களத்தின் பொறுப்பு மட்டுமின்றி ஆசிரியர்களதும் பொறுப்பாகும். தற்போது தொழிற் சங்கங்கள் ஆசிரியர்களின் உரிமைகள் தொடர்பாக மட்டுமே தலையிடுகின்றன. வாண்மைசார் அமைப்புக்களின் கடமை வித்தியாசமானது. உதாரணமாக, அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் வைத்தியர்களின் தொழிற்சங்கமாகும். எனினும் இலங்கை வைத்திய சங்கம் வைத்தியர்களின் வாண்மை அமைப்பாகும். அவர்களின்

தொழில் ரீதியான அறிவை மேம்படுத்துவதற்கு அது வருடம் பூராகவும் பாரிய செயற்பாடுகளை மேற்கொள்கிறது. இவ்வாறான செயற்பாடுகள் ஆசிரியர்களின் அறிவையும் தேர்ச்சிகளையும் இற்றைப் படுத்திக்கொள்வதற்கு அவசியமாகின்றன.

**கல்வி**

'கல்வி என்பது சிக்கலான ஓர் எண்ணக்கருவாக இருப்பதனால் அதற்குத் தெளிவான ஒரு வரைவிலக்கணத்தை வழங்குவது சிரமம். கல்வி என்பதில் ஒரு தனிக்கருத்து மாத்திரம் அடங்கவில்லை. கற்றல், கற்பித்தல், மதிப்பீடு செய்தல், இரசித்தல், பயிற்சி பெறுதல் போன்ற பல்வேறு கருத்துக்கள் இதனுள் அடங்கி இருக்கின்றன. Education (கல்வி) என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்தே முதலில் தோன்றியது. Educere என்ற லத்தீன் சொல் 'அகழ்ந்து வெளியே எடுத்தல்' என்ற கருத்தைத் தருகிறது. ஒவ்வொருவரிடமும் பல்வேறு காரியங்களை செய்வதற்குரிய உள்ளார்ந்த ஆற்றல் இருக்கிறது. மறைந்திருக்கும் இந்த ஆற்றலை வெளிக் கொணர்வதே கல்வியின் கடமையாகும். தற்காலத்தில் மனிதர்களின் இந்த உள்ளார்ந்த ஆற்றலில் 5% அல்லது 10% மட்டுமே விருத்தியடைந்துள்ளது எனப்படுவதனால், கல்வியின் இலக்குகள் மேன்மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.'

கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கல்வி பற்றி வழங்கும் விளக்கத்தின்படி, கல்வி என்பது பாட விடயங்களைக் கற்பது அல்லது விடயங்களை மனனம் செய்வது மாத்திரமல்ல. புத்தகங்களில் கூறப்படும் விடயங்கள் உண்மையானவயா பொய்யானவையா என விசாரித்து அறிந்து புரிந்து கொள்வதே கல்வியாகும். அதன்படி கல்வியை செய்முறை ரீதியான ஒரு செயல்முறையாகக் கருதலாம். கல்வி பெறுவோரின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப உரிய செய்முறை அனுபவங்களை வழங்குவதன் மூலம் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வழி காட்டுவதே கல்வி என வரையறை செய்யலாம். மனிதனுடைய உடல், உள, சமூக, கலாசார, ஒழுக்க மற்றும் ஆத்மீக ரீதியாக எல்லா அம்சங்களிலும்

பரிபூரணமடைந்த நிலையான விருத்தியை ஏற்படுத்துவதே கல்வியின் பணி எனக் குறிப்பிடலாம்.

கல்வியின் அடிப்படை இலக்குகளின்படி, அளவு ரீதியாக ஒருவரைப் பரீட்சை சித்தி அடைவதற்கு பயிற்றுவிப்பது மாத்திரமன்றி, அவரில் பண்பு ரீதியான விருத்தி பற்றியும் கவனம் செலுத்த வேண்டும் என்பது தற்காலத்தில் வலியுறுத்தப்படும் ஒரு விடயமாகும். இதன்படி தனியாளுக்கு மாத்திரமன்றி சமூகத்துக்கும் பொருத்தமான தேசிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தனியாளுக்கும் சமூகக் குழுக்களுக்கும் உதவுவது பண்பு ரீதியான கல்வியின் பொறுப்பாகும்.

**கல்வியின் பண்பு ரீதியான விருத்தி**

பண்பு ரீதியான கல்வி விருத்தி பற்றி உரையாடும் போது எழுகின்ற பிரதான கேள்வி பண்பு என்பதன் மூலம் கருதப்படுவது யாது என்பதாகும். வர்த்தக உலகிலெனின் பண்பு (quality) என்பது பயன்படுத்துவதற்கு ஏற்றதன்மையும் இனங் காணப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும் ஆற்றலுமாகும்.

21ஆம் நூற்றாண்டில் இந்த ஆற்றல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கையில் இருக்கின்ற கல்வி வாண்மையாளர்கள் எந்த அளவுக்கு தயாராக இருக்கின்றனர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதன் அடிப்படையில் கல்வித் வாண்மையாளர்களிடம் இருக்க வேண்டிய தேர்ச்சிகள் யாவை என்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எமது நாட்டில் கல்வி வாண்மையாளர்களின் விருத்தி என்னும் தலைப்பை நோக்கும் போது முதலில் நினைவுக்கு வருவது கல்வி வாண்மையாளர்கள் யார் என்ற வினாவாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முதல் பல்வேறு கல்வி நிறுவனங்களில் சேவை புரிகின்ற கல்விசார் பணியாளர்கள் அனைவரும் கல்வி வாண்மையாளர்கள் எனக் கூறலாம். எனினும் சாதாரண பொது மக்களிடையே கல்வி வாண்மையுள்ளவர்கள்

என அங்கீகாரம் பெற்றிருப்பவர்கள் இலங்கையின் கல்வித்துறையில் பாரிய அளவில் பங்களிப்பை வழங்குகின்ற ஆசிரியர்களும் அதிபர்களும் ஆவர்.

**ஆசிரியர்வாண்மைத் தேர்ச்சிகள்**

தேர்ச்சி என்பது குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வதற்கு உள்ள திறமையாகும். திறமை என்பது ஏதேனும் ஒன்று பற்றி அறிவைக் கொண்டிருப்பதை விட ஆழமானதொன்று. தேசிய கல்வி நிர்வகத்தின் ஆசிரியர் கைநூல்களில் குறிப்பிட்டுள்ளபடி, 'தேர்ச்சி எனக் கருதப்படுவது அறிவு, திறன், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பவற்றின் கலப்பாகும். தேர்ச்சி ஒன்றில் இந்த அம்சங்கள் அனைத்தும் அல்லது அவற்றுள் சில பல்வேறு விகிதங்களில் காணப்படலாம். எனவே சில தேர்ச்சிகள் அதிகளவில் திறன்கள் சார்ந்ததாக இருக்கலாம். இன்னும் சில கூடிய அளவு அறிவு சார்ந்ததாக அல்லது மனப்பாங்கு சார்ந்ததாக இருக்கலாம்.' எப்படி இருப்பினும் தேர்ச்சி என்ற வார்த்தைக்கு வெவ்வேறானவர்கள் வெவ்வேறு விதத்தில் அர்த்தம் கொடுத்துள்ளார்கள் என்பது ஆய்வு அறிக்கைகளிலிருந்து தெளிவாகிறது.

1974ஆம் ஆண்டு பொதுநலவாய அமைப்பின் அறிக்கையொன்றில் ஆசிரியர் ஒருவரிடம் இருக்க வேண்டிய தேர்ச்சிகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

'திறமையான ஆசிரியராவதற்கு பிள்ளை விருத்தி தொடர்பான அறிவு, கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய சாதனங்களும், பொருத்தமான முறைமைகளும் பற்றிய அறிவு தேவை. திறன்களும் கற்பித்தலும் மாணவர்களுக்கு/சமுதாயத்துக்கு அறிவுரை வழங்குவதில் பங்கு பெற வேண்டும்'. (பொதுநலவாய அமைப்பின் அறிக்கை, 1974).

இயல்பு கடந்து அசாதாரணமான வகையில் நிகழும் தொழில்நுட்ப விருத்தி, விரைவாக நிகழும் தொடர்பாடல் என்பவற்றுடன் 21 ஆம் நூற்றாண்டு ஆரம்பித்திருக்கிறது. புதிய தொழில்நுட்ப முறைமை ஒன்று

சந்தைக்கு வர முன்னரே வேறொரு முறைமை கண்டுபிடிக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறு துரித கதியில் மாற்றமடையும் ஓர் உலகத்தில் வாழ்வதற்கும், தொழில் புரிவதற்கும், கற்பதற்கும் இந்த நூற்றாண்டில் இருக்க வேண்டிய தேர்ச்சிகளாக கட்டுருவாக்கத்திறன், புத்தாக்கத்திறன், தீர்க்கமான சிந்தனயும் பிரச்சினை தீர்த்தலும், தொடர்பாடல், ஒத்துழைப்பு, தகவல் முகாமை, தொழினுட்பத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தல், தொழிற்சார், வாழ்க்கைத் திறன்களும், கலாசார ரீதியான ஊடுகடத்தல் போன்ற தேர்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

எங்கள் நாட்டு ஆசிரியர்கள் கண்ணியமான ஒரு பதவியை வகிக்கின்றனர். எனினும் அவர்களது வாண்மைத் தேர்ச்சிகள் பற்றிய பிரச்சினைகள் இருக்கின்றன. கல்வி பண்பு ரீதியாக விருத்தியடைய வேண்டுமாயின் ஆசிரியர் தமது தொழில் பற்றிய தேர்ச்சி உள்ளவராக இருப்பது, என்பது, பாடசாலையினுள் ஆசிரியரின் நடத்தை தொடர்பாக இன்றைய சூழலில் அவசரத் தேவையாகும்.

**ஆசிரியர் வாண்மை விருத்தி.**

ஆசிரியர் தொழிலில் பிரவேசிப்பவர்கள் பல்வேறு விதமான நம்பிக்கைகள், ஒழுக்க விழுமியங்கள், ஆளுமைப் பண்புகள் முதலியவற்றைக் கொண்டவர்களாக இருப்பதனால் அவர்களில் பண்புத்தரம் மிக்க ஆசிரியர்களாக செயற்படுவதற்குத் தேவையான அறிவு, ஆற்றல்கள், அங்கீகாரம் என்பவற்றோடு ஆசிரிய ஆளுமைக்குரிய பண்புகளை நோக்கி திசை முகப்படுத்துவதற்குத்தேவையானஅடிப்படையைஏற்படுத்திக்கொடுப்பது ஆசிரியர் கல்வியாகும். கற்பித்தலைத் தேர்ந்தெடுக்கும் ஆட்களுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத் துவதற்குத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் முதலியவற்றை வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் செயல்முறையே ஆசிரியர் கல்வி என அழைக்கப்படலாம். இதனால் உலகில் உள்ள அனைத்து நாடுகளும் ஆசிரியர்களைச் சேவைக்கு அமர்த்தும் போது, அவர்களை தொழில் ரீதியாக திசைமுகப் படுத்துவதோடு (சேவைமுன் ஆசிரியர் கல்வி), சேவையில் ஈடுபட்டிருக்கும் போது தொழில் ரீதியாக

விருத்தி செய்கின்றன (தொடர் ஆசிரியர் கல்வி). மாறிவரும் உலகுக்கு ஏற்ற வகையில் இந்த விருத்திக் கோலம் இலங்கையில் போதிய அளவில் நிகழ்கின்றதா என்பது சரியான முறையில் கணிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சேவைமுன் ஆசிரியர் கல்வியின் மூலம் மாத்திரம் ஆசிரியர் ஒருவரை பரிபூரணமாக ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியாமல் இருப்பதனாலேயே சேவையில் இருக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி முக்கியத்துவம் பெறுகிறது என்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. ஏனெனில், சேவைமுன் பயிற்சி நெறியின் போது ஆசிரியருக்கு வெற்றிகரமான முறையில் செயல்முறைப் பயிற்சியை வழங்க முடிவதில்லை. கற்பிப்பது எப்படி என்ற அனுபவத்தை கற்பித்தலின் மூலமே ஆசிரியர் பெற்றுக் கொள்ள வேண்டும். தொழில்வாண்மைப் பயிற்சியின் மூலம் ஆசிரியரின் தொழில் தரமும், தொழில் காரணமான திருப்தியும் அதிகரிக்கின்றமையினாலேயே வாண்மை விருத்தி முக்கியத்துவம் பெறுகிறது. யாதேனும் ஒரு கல்வி முறையின் பண்புத்தரத்தை, அதில் பணியாற்றும் ஆசிரியர்களின் பண்புத்தரமே தீர்மானிக்கின்றது. இதனால்தான் உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஆசிரிய கல்வி தொடர்பாக விசேட கவனம் செலுத்துகின்றன.

ஆசிரியர்களுக்கான தொழிற் திறன்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வழியே ஆசிரியர் கல்வி என தேசிய கல்வி ஆணைக்குழு (2009) எடுத்துக்காட்டியுள்ளது. ஆசிரிய வாண்மை விருத்தி என்பது தம்மிடமுள்ள அறிவைச் செய்முறையில் மாணவருக்கு வழங்குவது எப்படி என்பதை ஆசிரியர் கற்றுக் கொள்வதாகும். இதன்படி தமது கடமையை வெற்றிகரமாக நிறைவேற்று வதற்குத் தேவையான அனுபவங்கள், ஆற்றல்கள், பயன்பாடுகள் பற்றி அறிவூட்டுவதும் விருத்தி செய்வதுமே ஆசிரிய வாண்மை விருத்தியென வரைவிலக்கணம் கூறலாம். 21ஆம் நூற்றாண்டில் ஆசிரிய வாண்மை விருத்தியின் போது நிச்சயமற்ற, பாதுகாப்பற்ற, அறியப்படாத எதிர்காலம் ஒன்றுக்காக, அதாவது சிக்கல் மிக்க காலப்பகுதி ஒன்றுக்காக ஆசிரியர்

தம்மைத் தாமே ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இதன்படி இன்று ஆசிரியர்களின் வாண்மை விருத்தி என்பது, ஆசிரியர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பட்டப் படிப்பின் பின்னர் ஏதேனும் ஒரு பாடசாலையில் பணிபுரிகின்ற போது தமது வாண்மை விருத்தி தொடர்பாக செய்யப்படும் முடிவற்ற செயல் முறையே என வரையறை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆசிரியர் கல்வியும், ஆசிரியர் சான்றிதழ் வழங்குதலும் 1870இல் பொதுக் கல்வியின் ஆரம்பத்தோடு தொடங்கி இருக்கின்றன. இன்று ஆசிரியர் பயிற்சி வழங்குகின்ற நிறுவனங்கள் பல இருக்கின்றன. பூகோள ரீதியில் ஆசிரியர் கல்வியில் ஏற்பட்டு வரும் போக்குகளுக்கு ஏற்ப, இலங்கையில் சேவை புரியும் ஆசிரியர்களுக்காக இருக்கின்ற வாண்மை விருத்திப் பாடநெறிகள் தொடர்பாக நோக்கும் போது, குறிப்பாக பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப் பின் கல்வி டிப்ளமோப் பாடநெறி, கல்வி முதுமாணிப் பாடநெறி என்பன கொழும்பு, பேராதனை, கிழக்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களினாலும் திறந்த பல்கலைக்கழகத் தினாலும் தேசிய கல்வி நிறுவகத்தினாலும் நடத்தப்படுகின்றன என்பது தெரிகிறது. இந்தப் பாடநெறிகளின் பிரதான உள்ளடக்கமாக இருப்பது கல்வி பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவை ஆசிரியருக்கு வழங்குவதே (தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை, 2014). பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் கல்விமாணி பாடநெறிகளிலும் இதேபோன்று ஆசிரியருக்கு கோட்பாட்டு ரீதியான அறிவை வழங்குவதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விஞ்ஞானம் மற்றும் கணிதம் கற்பிப்பதற்காக சேர்த்துக் கொள்ளப்படும் பெரும்பாலான ஆசிரியர்கள் உரிய வாண்மை விருத்தி எதுவுமின்றி பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர் என்பது இலங்கைக் கல்வித் திட்டத்தின் தற்போதைய நிலை பற்றிப் பரிசீலனை செய்யும்போது தெரிய வந்துள்ளது. அதிலும் குறுகிய கால சேவைக்கால ஆசிரியர் பயிற்சி அமர்வுகளை ஆசிரியர் மையங்களும் வலயக் கல்வி காரியாலயங்களுமே நடாத்துகின்றன. கல்வியின் பண்புத்தர விருத்திக்காக, சேவையில் இருக்கும் ஆசிரியர்களுக்கு அறிவு, திறன்,

மனப்பாங்கு, விழுமியங்கள் பெறுமானங்கள் முதலியவற்றை வழங்கி பண்புத்தரம் மிக்க ஆசிரியர் சந்ததி ஒன்றை உருவாக்குவதற்கு வேண்டுமாயின், இந்த சேவைக்கால ஆசிரியர் பயிற்சி அமர்வுகள் இற்றைப் படுத்தப்பட வேண்டும். இலங்கையில் ஆசிரியர் கல்வி, ஆசிரியர் விருத்தி சம்பந்தமாக உச்ச அடைவுக்கான இலக்குகள் பற்றி தேசிய மட்டத்தில் இணக்கம் காணப்படாமை ஒரு குறைபாடாகும். பல நிறுவனங்கள் இது தொடர்பாக தனித்தனியாகச் செயல்படுவதனால், சகல நிறுவனங்களையும் இணைக்கும் வகையில் தேசிய கோட்பாடு ஒன்றினால் வழிநடத்தப்படும் ஒன்றிணைப்புச் செயல்பாடுகளைக் கொண்ட ஒரு தொகுதியான்றாக அது மாற்றப்பட வேண்டியுள்ளது என நாட்டின் பிரபலமான ஒரு கல்வியியலாளராக இருந்த கலாநிதி ஜி. பி. குணவர்தன 2012 இல் கூறியுள்ளார். பண்புத்தரமுள்ள கல்விச் செயற்பாடொன்றுக்காக சேவைக் காலப் பயிற்சி அமர்வுகள் மூலம் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதனால் அவர்களை எந்த அளவுக்கு பண்புத்தரமுள்ள முறையில் விருத்தி செய்யலாம் என்பது பற்றி பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

**அதிபர்களுக்கான வாண்மை விருத்தி**

இலங்கையின் கல்வி அமைப்பில், அதிபர்களின் வாண்மை விருத்தி பற்றிப் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. புதிய சுற்றுநிருபமொன்று வெளிவந்ததும் வலயக் கல்வி அலுவலகமோ, மாகாணக் கல்வி அலுவலகமோ அதுபற்றி அறிவுறுத்துவதே பெரும்பாலும் இடம்பெறுகிறது. இதனால் அதிபர்கள், பண்புத்தரமுள்ளகல்விஅமைப்பொன்றைஉருவாக்கமுயற்சிப்பதைவிட சுற்று நிருபங்களின்படி பணியாற்றித் தமது மேலதிகாரிகளுக்கு பொறுப்புக் கூறவே முயற்சிக்கின்றனர். அதுவன்றி, தமது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அங்கு கற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்பாக பொறுப்புக்கூற முனைவதாகத் தெரியவில்லை. அதிபர்களின் வாண்மை விருத்தி தொடர்பாக ஆய்வு ரீதியான கண்ணோட்டத்துடன் நோக்க முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பது இலங்கையின் ஆய்வு இலக்கியங்களைப் பரிசீலனை

செய்யும்போது தெளிவாகின்றது.

தற்காலத்தில் இலங்கை அதிபர்களுக்கான வாண்மை விருத்திப் பாடநெறிகளைச் செயல்படுத்தும் பிரதான நிறுவனமாக இருப்பது தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்த கல்வி தலைமைத்துவ விருத்தி, முகாமைப் பீடம் ஆகும். இந்த நிறுவனத்தினால் நடத்தப்படும் பாடநெறிகளை நோக்கும்போது, அம்பாறை போன்ற தூரப் பிரதேசங்களில் உள்ள அதிபர்கள் இப்பாட நெறியில் கலந்து கொள்வது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. பிரயாணக் கஷ்டங்கள், விடுதியில் தங்கி இருக்க விரும்பாமை, நிதிப் பிரச்சினைகள் முதலியன இவற்றுள் முதலிடம் பெறுகின்றன. அத்துடன் இந்தப் பாட நெறியில் கலந்து கொள்வது தொடர்பாக அதிபர்களுக்கு எவ்வித ஊக்குவிப்பும் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக அம்பாறை போன்ற தூரப் பிரதேசங்களில் உள்ள அதிபர்கள் வாண்மை விருத்திக்கு உட்படுவது குறைவு. கடந்த கோவிட்-19 பெருந்தொற்று நிலைமையின் கீழ், இலங்கையின் கல்வி முறை நிகழ்நிலைக்கு மாறியதன் விளைவாக இந்தப் பாடநெறியில் சேர்ந்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித் திருக்கிறது என்பதைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். நிகழ்நிலைக் கல்வியில் நாம் கண்டுகொள்ளாத அனுகூலம் இதுவெனலாம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு நிகழ்நிலைக் கல்வி பொருத்தமற்றதாக இருப்பினும் வளர்ந்தோர் கல்வியில் அது பயன்மிக்க முறையில் பயன்படுத்தப்படலாம் என்பது ஏனைய நாடுகளின் கல்வி முறைகளை அவதானிப்பதன் மூலம் தெளிவாகின்றது.

இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்கள் உண்மையாகவே விளைதிறன் மிக்கதாக மாற வேண்டுமானால் இந்தப் பரந்த அமைப்பை நாம் புறக்கணிக்க முடியாது என்பது வலியுறுத்தப்பட வேண்டும். அதன்படி ஆசிரியரையும், ஆசிரியத் தொழிலையும் கண்ணியமானதோர் உயரிய மட்டத்துக்கு உயர்த்தி வைக்கக்கூடிய வகையில் சமூகத்தினதும், ஆசிரியர் சந்ததியினதும் மாணவர் சந்ததியினதும் மனோபாவத்தில் தீர்க்கமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## (x) ஒட்டுமொத்த கல்வியின் ஒரு கூறாக ஆய்வின் வகிபங்கினை நிலைப்படுத்தல்

பிள்ளைகள் பிறப்பிலேயே ஆய்வாளர்கள். அவர்கள் எப்போதும் விசாரணை செய்யும் இயல்புடையவர்கள். பிறந்தது முதல் அவர்கள் உலகினை ஆராய முற்படுகிறார்கள். தாயிலிருந்து உறிஞ்சும் முதலாவது துளிப் பாலிலேயே அது ஆரம்பிக்கிறது. எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் பிள்ளைகளிடம் உண்டு. ஏதேனுமொன்றை அறிந்துள்ள ஒருவரைச் சந்திக்கும்போதும் தாம் காணும் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் அவர்கள் கேள்வி கேட்கின்றனர். விளையாட்டுப் பொருட்கள் கிடைக்கும்போது சில பிள்ளைகள் அவற்றைக் கழற்றிப் பார்ப்பதற்கே முனைகின்றனர். ஏதேனுமொன்று எப்படி வேலை செய்கிறது என்பதை அறியவே ஆசைப்படுகின்றனர். இதுவே விஞ்ஞானம். உலகைப் பற்றி ஆராய்கின்ற விஞ்ஞானிகள், பிள்ளைகள் இயல்பாகச் செய்கின்ற அதே வேலையை, வாண்மையாளர் என்ற வகையில் ஒழுங்காகச் செய்பவர்களே. இதன்படி நோக்கும் போது ஒவ்வொரு பிள்ளையும் ஓர் ஆய்வாளரே; விஞ்ஞானியே. எனினும் ஆய்வாளர்கள் கேள்வி கேட்பதற்கு அப்பாலும் செல்கின்றனர். அவர்கள் கேள்விகளுக்கு விடை காணவோ, தீர்வு காணவோ ஆய்வு விதிமுறைகளின் அடிப்படையில் பல்வேறு அவதானிப்புகளைப் பெற்று அதைப் பற்றி ஆய்வு செய்கின்றனர். அதன் அடிப்படையில் முடிவுகளுக்கு வருகின்றனர். அதன்படி கோட்பாடுகளை உருவாக்குகின்றனர்.

எனவே, பிள்ளைப் பருவத்தில் உள்ள ஒவ்வொருவரையும் ஆய்வாளராக, கண்டறிபவராக மாற்றுவது எளிதாகும். எனினும், எமது கல்வி முறையில் இது எந்த அளவுக்கு நிறைவு பெறுகிறது? உயர்தரத்திலிருந்த தனிநபர், கூட்டுச் செயற்றிட்டங்கள் அதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்திருந்தன. எனினும் இந்த செயற்றிட்டங்களுக்குக்கூட ஒட்டுமொத்த பாடசாலை அமைப்பினுள் ஒரே விதமான பெறுமானம் வழங்கப்பட்டிருந்ததா அல்லது அவற்றின் பெறுமதி உணரப்பட்டிருந்ததா என்பதை அறியேன். இதனால்தான் என்னவோ தனியாள் செயற்றிட்டங்கள் கலைத்திட்டத்திலிருந்து

நீக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக முறையில்கூட ஆய்வுகளில் போதிய அளவு கவனம் செலுத்தப்படுவதில்லை என்றே நினைக்கின்றேன். அது மட்டுமல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பதவி உயர்வுக்குரிய ஒரு தகுதி ஒன்றாக வரையறுக்கப்பட்ட நோக்கத்துடனேயே ஆய்வு ஒப்படைகள் நிறைவேற்றப்படுகின்றன.

**ஆய்வும் அபிவிருத்தியும், புத்தாக்கமும் தொழில்நுட்ப ஏமாற்றமும்.**

நவீன பின் கைத்தொழில் அறிவுசார் பொருளாதாரம், பொருளாதார விருத்தி, புத்தாக்கங்கள், தேசிய ஆய்வுத் தகவு என்பவற்றுக்கு இடையில் ஒரு தொடர்பு தெளிவாகத் தெரிகிறது. பல்கலைக்கழகங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், அவ்வாறான பொருளாதார ரீதியில் பொருத்தமுடைய புத்தாக்கங்களுக்கு பயன்மிக்கனவாக அமைந்துள்ளன. அதன் விளைவாக நவீன ஆய்வையும், அபிவிருத்தியையும் (R&D) ஊக்குவிப்பதற்காக அரச முதலீடுகளை பல்கலைக்கழகங்கள் பயன்படுத்துவதானது, பூகோள ரீதியில் போட்டியிடுவதற்காக ஒரு நாட்டுக்கு தீர்க்கமாகத் தேவைப்படுகின்றது. இந்த பூகோளப் போக்குக்கு ஏற்ப உயர்மட்ட ஆசிய பல்கலைக்கழகங்கள் பல 'கற்பிக்கும் பல்கலைக்கழகம்' என்ற நிலையிலிருந்து 'ஆய்வுப் பல்கலைக்கழகம்' என்னும் நிலைக்கு மாற்றம் அடைந்திருக்கின்றன.

புத்தாக்கங்களைச் செய்வதற்காக ஆக்க பூர்வமான ஒரு நோக்கும் அந்த நோக்கை அடைவதற்கு ஏற்ற வகையில் பரந்த, ஆழமுள்ள புத்தி ஜீவிகளை உருவாக்குவதற்காக இலங்கையில் பட்ட, பட்டப்பின் கல்வித்துறையில் ஆய்வுகளையும் புத்தாக்கத்தையும் அடிப்படை அம்சமாக ஆக்கிக் கொள்வதற்கு முன்னுதாரணவாய்ப்பாடு மாற்றமொன்று தேவைப்படுகிறது. கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக அதிக பாதிப்புக்குள்ளாகி இருக்கும்எமதுபொருளாதாரத்தைமீண்டும்உறுதிப்படுத்துவதற்காகவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் மூலோபாய

ரீதியில் முக்கியத்துவம்மிக்க துறைகளில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் நவீன ஆய்வு, அபிவிருத்தி தொடர்பான பங்களிப்பு அவசியமாகிறது. இங்கு மூலோபாயம் என்பது மாறிவரும் உலகில் தோன்றும் சந்தர்ப்பங்களை தம் வசப்படுத்திக் கொள்வதாகும். ஏனெனில் விஞ்ஞானபூர்வமான வாய்ப்புக்களை எப்போதும் எதிர்வு கூற முடியாதிருக்கிறது. எனவே, எழுகின்ற சாத்தியக்கூறுகளுக்கும் வாய்ப்புகளுக்கும் கருத்துக்களுக்கும் விளைவு காட்டுவதில் தன்மை, அந்த வாய்ப்புகளை தவறவிடாமல் வெற்றி கொள்ளுதல் என்பன வெற்றி காண்பதற்கு அவசியமாகும். உதாரணமாக, கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக தெரிய வந்த நவீன அறிவிலுள்ள குறைபாடுகள், இதுவரை ஆராயப்படாத விடயங்கள் பற்றிய ஆய்வுகளுக்கு முன்னெப்போதும் இல்லாத விதத்தில் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. அறிவைக்கட்டுருவாக்குதல், பகிர்தல் என்பவற்றுக்குரிய அப்படியான, பிரயோக ரீதியான ஆய்வுகளின் மீது செயற்படும் அதேவேளை, உற்பத்தித் தொழில் துறையின் ஒத்துழைப்போடு, அறிவுசார் சொத்துக்களை உற்பத்தி செய்வதற்காக, ஆய்வுகளின் விளைவாக கிடைக்கும் அறிவை பயன்தரும் முறையில் உபயோகிப்பதற்கு அவசியமான பொறிமுறைகளை தயார் செய்வதற்கும் வணிகமயமாக்கலுக்குத் தேவையான அறிவையும் தொழில்நுட்பத்தையும் பரிமாறிக் கொள்வதற்கும் 'ஆய்வுப் பல்கலைக்கழகங்கள்' நடவடிக்கை எடுக்க முடியும்.

புதிய உற்பத்திகளாகவும் சேவைகளாகவும் மாற்றப்படக்கூடிய, அறிவு மற்றும் ஆய்வு ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றிணைந்த - பல்வித பாடங்கள் சார்ந்த அணுகுமுறைகளின் பெறுமதியை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட உயர்கல்வி சீர்திருத்தங்கள் இலங்கை யில் உடனடியாகச் செய்யப்பட வேண்டும். எனினும் இதற்காக வேறு நாடுகளில் உள்ள ஒத்துழைப்புப் பொறிமுறைகளை பிரதி செய்வது மாத்திரம் போதாது. இலங்கையின் நிலைமைகளுக்கு நன்கு பொருத்தப்பாடுடைய முன்மாதிரியாக, பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழில் ஒத்துழைப்பில், பூகோள, பண்பாட்டு மற்றும்

சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் முறையை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து இணைத்துக் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அனைத்து சாராருக்கும் பரஸ்பரம் பயனும் இலாபமும் அளிக்கும் விதத்தில் அமைந்த செயற்பாடாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு அறிவுசார் சொத்துக்களையும் தொழில் வாய்ப்புகளையும் உருவாக்குவதோடு, தகவு, ஆற்றல் என்பவற்றைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். எனவே உயர்கல்வி நிறுவனங்களின் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயன் தரும் விதத்தில் புத்தாக்கம், தொழினுட்ப அபிவிருத்திக்கும் விரிவாக்கத்திற்கும் வசதிகள் செய்து கொடுக்கக் கூடிய, பிரயோக ரீதியான தீர்வுகளை நாடுகின்ற, விஞ்ஞான, பொருளாதார, சமூக, ஒழுங்கமைப்பு அம்சங்களைக் கொண்ட பல்வகை முகாமைத்துவ சட்டகம் ஒன்று தயாரிக்கப்படுவது அவசியமாகும்.

ஆய்வும் அபிவிருத்தியும் செயல்படுத்தப்படுகின்ற புத்தாக்க மையங்களாக இலங்கையின் பல்கலைக்கழகங்களை மாற்ற உதவும் வகையில் இலங்கை புத்தாக்கச் சூழல் அணுகுமுறையொன்றைப் பின்பற்ற முடியும். ஆய்வும் அபிவிருத்தியும் நடைமுறையில் உள்ள பல நாடுகளின் பொருளாதாரத்தில் இது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. புத்தாக்கச் சூழலொன்று துரிதமாகச் செயல்படுவதற்கு, ஆய்வு இணக்கமுள்ள நோக்கும், பண்பாடும், வசதிகளை வழங்குகின்ற சட்ட ரீதியான வழிகாட்டல் அமைப்பும், நிதியுடனான, மனித மூலவளமும், உட்கட்டமைப்பு வசதிகளும், ஒத்துழைப்பு வழங்குகின்ற இறுதி ஓர் பயன்பாட்டுச் சந்தையும் தேவைப்படுகின்றன. அனைத்துப் புத்தாக்கச் சூழல்களையும் ஒட்டுமொத்தமாக நோக்குவதன் மூலம், புத்தாக்க செயல்முறையின் பரஸ்பர ஒத்துழைப்பு, இடைச்சார்புத் தன்மை என்பவற்றை மனதில் கொண்டு, இலங்கைக்கு போட்டிரீதியாக அனுகூலமுள்ள இடத்தை உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்ற துறைகளில், உற்பத்தித் தொடர்புகளை ஊக்குவித்து போசிப்பதற்கு ஏற்ற சிறந்த முறைகளை இனங்கண்டு

கொள்ள முடியும்.

இதன் முதற் படியாக, ஆய்வுகளை முற்படுத்துவதன் மூலம், பொருளாதாரத்தை மீள் கட்டமைப்புச் செய்வதற்கு தேவையான ஆய்வுத் துறைகளை ஆழமாக ஆராய்ந்து, கோவிட்-19க்குப் பிந்திய மீட்டெடுப்புச் செயன்முறைக்கு உதவ முடியும். உதாரணமாக சுகாதாரம், போசணை, உணவுப் பாதுகாப்பு, இறக்குமதிப் பிரதியீடு, ஏற்றுமதி விருத்தி என்பவை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தொழினுட்பப் புத்தாக்கங்கள் மூலமாக நிகழ்நிலைத் தொழிற்பாடுகள், சுற்றாடல் இணக்கமுள்ள வேலைகள், மேம்படுத்தப்பட்ட உற்பத்திகள், சூரிய/ காற்று/ கடலலை போன்ற இயற்கையான சக்தி முதல்களைப் பயன்படுத்தல் போன்ற புதிய துறைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தோடு சான்றுகளின் அடிப்படையில் தேசிய கொள்கைகளை உருவாக்கும் போது முக்கியமான பங்களிப்பைச் செய்வதற்குப் பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக இந்த நிறுவனங்களும் அவற்றின் ஆய்வு விளைவுகளும் கோளமயரீதியில் போட்டி முறையில் நிலைத்து நிற்கும் விதத்தில், பூகோளரீதியான எதிர்கால நோக்குக் கொண்ட ஆய்வுக்கு, புத்தாக்கத்துக்குமான மையங்களை உருவாக்குதலும், உயர் நியமங்களுக்கு ஏற்ப, கோளமயரீதியான பாடப்பரப்புகளுடன் இணைந்த அதிநவீன ஆய்வுகள் செய்யப்படுவதும் அவசியம். புகழ்பெற்ற ஆய்வு, அபிவிருத்தி ஆய்வுகூடங்கள், விஞ்ஞான நிறுவனங்கள், வர்த்தக முயற்சிகள் என்பவற்றுடன் செயல்ரீதியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பல்கலைக் கழகங்களும் தொழிற்சாலைகளும் தேசிய அபிவிருத்தியும் மேலும் வலுப்பெற முடியும்.

இந்த மாற்றத்திற்கான பிரதான கூறுகளின் மூலோபாயத்தில் முன்னுதாரணமான- வாய்ப்பாடு மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். முதலீட்டின் மூலம் வளங்களை அதிகரிக்கச் செய்தல், ஆற்றல்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துதல், மிகச் சிறந்த ஆய்வாளர்களை சேர்த்துக் கொள்வதும் பற்றி வைத்துக் கொள்ளலும், தேவைகள் பற்றி

கட்டமைப்புரீதியாக மாற்றம் செய்தல் என்பவை பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதேபோன்று சிறந்த பண்புத் தரமுள்ள ஆய்வு மையங்களை உருவாக்குதல், ஒத்துழைப்புடன் ஆய்வுகளுக்காக நிதி சேகரித்தல், சர்வதேச அறிக்கைகளுக்காக போட்டியிடும் திறனை விருத்தி செய்தல், நன்கொடைகள் மூலம் ஆய்வு நிதிகளை மேம்படுத்தல் என்பனவும் முக்கியமாகும். குறிப்பாக அதிகளவு சர்வதேச ஆய்வு நிதி அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவும் விதத்தில் பல்கலைக்கழக மட்டத்தில் தனியாக 'ஆய்வு அறிக்கை விருத்தி, உதவி, முகாமைத்துவப் பிரிவு' ஒன்று தனியாக உருவாக்கப்பட வேண்டும். மேலும், அர்த்தமுள்ள விதத்தில் செல்வாக்கு ஏற்படுத்துவதற்காகச் செயற்பட வழிவகுக்கும் பாரிய அளவிலான ஆய்வுத் திட்டங்களைச் சூழ, ஆய்வை அடிப்படையாகக் கொண்ட மேலும் பல பட்டப் பின் கற்கைகள் இருத்தல் வேண்டும்.

இலங்கையில் உயர் கல்வி நிறுவனங்களில் அறிவை உருவாக்குவதற்காக ஆய்வுகளை பலப்படுத்துவது அவசியம்.

ஆய்வு அறிக்கைகளை வெளியிடுதல், ஆய்வு, அபிவிருத்திக் கற்கை விருத்தி என்பன பதவி உயர்வுகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதை விட்டும் அப்பாற்சென்று வணிக மயமாக்கல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆய்வுகளின் ஊடாக உருவாக்கப்படும் புதிய அறிவு, பொதுமக்களுக்கு நற்பயன் தருவதயும் - சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பயனுள்ளதாகவும் மாற வேண்டும்.

பல்கலைக்கழகச் சட்டமூலத்தின் ஊடாக இந்தச் செயன்முறைக்குத் தடையாக இருப்பவற்றைக் களைவதற்கும், அறிவுசார் சொத்துக்களை உருவாக்குதல், புத்தாக்கங்கள் செய்தல், வணிகமயமாக்கலுக்கு வழிவகுக்கும் ஆய்வு, அபிவிருத்திக்காக வசதி செய்து கொடுத்ததில் இருக்கும் ஆகியவற்றில் இடைவெளிகள் பற்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

கொள்கையாக்கம் முதல் தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களில் அபிவிருத்தி வரையான ஆய்வுகளின் செல்வாக்கு பற்றிக் கவனம் செலுத்துவது அவசியம்.

மேலும், வெளிநாடுகளில் சிறந்த அளவில் நிதி அறிக்கைகள் வழங்கும் நிறுவனங்களில் இருந்து போட்டிரீதியாக பெற்றுக் கொள்கின்ற நிதி-களை இலங்கைக்குக் கொண்டு வருவதில் இப்போது காணப்படும் அதிகாரிகள் சார்ந்த சிவப்பு நாடாத் தடைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

மேற்சொன்ன பின்புலங்களை நன்கு விளங்கிக் கொண்டு எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்வதற்காக, சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர என்ற ஒருவர் போதாது என்பதையும் ஆயிரமாயிரம் கன்னங்கரக்கள் தேவைப்படுகின்ற ஒரு யுகத்தில் இருக்கின்றோம் என்பதையும் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையர்கள் என்ற வகையில் நாம் முகங் கொடுக்கும் எல்லா விதப் பிரச்சினைகளிலிருந்தும் மீட்சி பெறுவதற்குரிய ஒரே வழி, நவீன உலகிற்குப் பொருத்தமான விளைதிறனுள்ள பிரஜையொன்றை உருவாக்குவதற்காக, தன்முனைப்பைத் தாண்டிச் சிந்திக்கின்ற, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன ஒன்று சேர்ந்த தேர்ச்சிகளோடு தேவையுமுள்ள ஆசிரியர்களையும் அறிஞர்களையும் கல்வியியலாளர்களையும் அரசியல்வாதிகளையும் உள்ளடக்கிய பிரஜைகளை உருவாக்கும் ஆற்றலுடைய பரந்த அளவிலான கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிப் பேச வேண்டிய மிகச் சிறந்த தருணம் இதுவே என இறுதியாக வலியுறுத்த விரும்புகிறேன்.

**தாய் நாட்டோடு நாட்டு மக்களையும் வெற்றி பெறச் செய்வோம்.**

• • • •

விசேட நன்றி: தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வு, அபிவிருத்திப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி கொட்வின் கொடித்துவக்கு அவர்களுக்கு.

உசாத்துணைகள் :


1. கே.எச்.எம். சுமதிபால, History of Education in Sri Lanka 1796-1965“, திஸ்ஸ வெளியிட்டார்கள், தெஹிவளை, 1968.

2. கலாநிதி ஸ்வர்ணா ஜயவீர, “கல்வியை விரிவாக்கல் -ஒரு முடிவு பெறாப் பணி .“ 1989 ஒக்டோபர் 13, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர நினைவு உரை 1989.

3. பேராசிரியர் நாரத வர்ணசூரிய, “இன்றைய சூழலில் கன்னங்கர மரபும் உயர்கல்வி தொடர்பாக அரசின் வகிபாகமும்,“ 2008 ஒக்டோபர் 16, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர நினைவு உரை 2008.

4. பேராசிரியர் சுஜீவ அமரசேன, “மருத்துவக் கல்வியும் கன்னாங்கர நோக்கும்“, 2017 ஒக்டோபர் 13, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர நினைவு உரை 2017.

5. திரு. ஆர். எஸ். மெதகம, “ கன்னங்கரவுக்கு பிந்திய காலத்தின் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய மீளாய்வு“, 2014 ஒக்டோபர் 13, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர நினைவு உரை 2014.

6. ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், பத்தரமுல்ல, නව ලොවට ගැලපෙන ඵලදායී පුරවැසියෙකු බිහි කිරීම උදෙසා රට ඉල්ලන අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ ගවේෂණ,“ 2022 ஜனவரி-மார்ச், 39ஆவது இதழ்.

**சொற்பொழிவாளர் பற்றி**

பேராசிரியர் அதுல சுமதிபால அவர்கள் 1980 ஆம் ஆண்டு கொழும்பு மருத்துவ பீடத்திலிருந்து மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்திலிருந்து குடும்ப மருத்துவவியலில் மருத்துவ முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1996இல் பேராசிரியர் சுமதிபால அவர்கள் இங்கிலாந்து அரச உளநோய்ச் சிகிச்சைக் கல்லூரியின் உறுப்பினராகத் தகுதி பெற்றார். 2004 ஆம் ஆண்டு அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

அவர் இலங்கை ஆய்வு, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாவும் அதன் பணிப்பாளரும் ஆவார். 2020 முதல் கண்டி, ஹந்தானை தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் தலைவராகவும் இருக்கின்றார்.

அவர் 2021 ஏப்ரல் வரை இங்கிலாந்தின் கீல் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் உளமருத்துவவியல் பேராசிரியராகச் செயற்பட்டதோடு இன்று வரை அதன் கௌரவ பேராசிரியராக இருக்கின்றார். அவர் லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியின் உளச் சிகிச்சை நிறுவனத்தின் கோளமயரீதியான உளநலம் பற்றிய கௌரவ பேராசிரியராவார். அவர் இலங்கை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் உளச் சிகிச்சை, உயிர் மருத்துவ ஆய்வுகள் பற்றிய வெளிவாரிப் பேராசிரியராகவும் கடமையை புரிகின்றார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்திற்கான உளச்சுகாதாரம் பற்றிய பிராந்தியச் சிறப்பறிஞர்கள் குழுவின் உறுப்பினராகவும் இருக்கின்றார்.

'பிரித்தானிய உளச் சிகிச்சை சஞ்சிகை' என்பது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் அரச உளச்சிகிச்சைக் கல்லூரியின் சஞ்சிகையாகும். 1853 முதல் இது வரையிலான காலத்துள் அதன் ஆசிரிய பீடத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரே ஒரு இலங்கையர் இவரே.

2018 இல் இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட 'விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் விருத்தி செய்வதற்கான சிறந்த தலைமைக்குரிய விருது இவருக்கு வழங்கப்பட்டது. அத்தோடு அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு 'விஞ்ஞானம், தொழினுட்ப முன்னேற்றத்திற்கான சர்வதேச ஒத்துழைப்பின் சிறப்பு விருதும் கிடைத்தது. 2001, 2009, 2010, 2011, 2012, 2013, 2014, 2015, 2016ம் ஆண்டுகளில் அவருடைய ஆய்வு வெளியீடுகளுக்காக இலங்கை தேசிய ஆய்வு கவுன்சிலினால் வழங்கப்பட்ட ஜனாதிபதி விருது கிடைத்தது.

பேராசிரியர் சுமதிபால அவர்களுக்கு ஐக்கிய இராச்சியம், இலங்கை உட்பட தெற்காசிய சூழல்களில் முக்கியத்துவம் பெறும் விஞ்ஞான ஆய்வுகள் பற்றிய பரவலான நிபுணத்துவ அறிவும் அனுபவமும் உண்டு. ஆய்வுகள் தொடர்பான ஒழுக்கநெறிமுறைகளுக்கு மேலதிகமாக உள ஆரோக்கியம், இரட்டையர் ஆய்வு எனும் துறைகளில் இவர் சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெற்றுள்ளார். இந்தத் துறைகளில் 100க்கும் மேற்பட்ட ஆய்வு அறிக்கைகளுக்கும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம் என்பவற்றால் வெளியிடப்பட்ட 15க்கு மேற்பட்ட நூல்களுக்கும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார்.

இவர் நூலாசிரியராகவும் நிபுணத்துவம் மிக்க கவிஞராகவும் மற்றும் பாடலாசிரியராகவும் திகழ்கின்றார்.